# சுடர்

கலை இலக்கியத் திங்கள் இதழ்



ஐப்பசி 1982 விலை ரூபா 2. 00

# வாசகர் வாய்மொழி

இன்று ஈழத்தில் எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி, ஒரு சில மாதங்களில் மறைந்து போகின்றன. ஆனல் 'சுடர்' மட்டும் தொடர்ந்து வெளிவருவதையிட்டு எமது மன்றம் மகிழ்ச்சியடைகின்றது. இன்றைய வாசகர்கள் கதைக்குரிய படத்தைப் பார்த்து விட்டுத்தான் கதையைப் படிக்கிறார்கள். சுடரில் வெளிவரும் ஓவியங்கள் அத்தனையும் கதைகளைப் படிக்க தூண்டிவிடுகின்றன. குறிப்பாக அட்டைப் படத்தில் இலக்கிய காட்சிகளை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றார் ஓவியர் திரு. குமாரவேல் அவர்கள். இவருக்கு எமது பாராட்டுக்கள். அரி அவர்களின் பதில்கள் சிந்தனையைத் தூண்டி விடுகின்றன. வளரும் இளம் எழுத்தாளர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் சுடர் அளிப்பதையிட்டு எங்கள் மன்றம் சார்பாக பாராட்டுகின்றோம்,

எச். மெத்தியேஸ். (செயலாளர்)
கலைவாணி கலா மன்றம்
புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.

O O O O

புரட்டாதி இதழை புன்னகையோடு புரட்டினேன். புதுவித பூங்காவனமே. தாரகை சஞ்சிகை ஆசிரியர் கண. மகேஸ்வீரனின் இன்னொரு தடவை வருவாயா என்ற பாரதி கவிதை மறு சுடரிலும் இன்னொரு தடவை வராதா என ஏங்குகின்றேன். இலை மறை காய்போல் மறைந்திருந்த கவிஞர் கௌரிவாசனை கௌரவித்ததற்கு என் நன்றி. அமுதசுரபி ஆசிரியரின் பேட்டி எல்லா சஞ்சிகைகளுக்கும் போட்டியாகவே அமைந்து விட்டது. அரியின் அருந்தவ பதில்களை ஆயிரம் முறை பாராட்டினாலும் 'தகும்' உள்ளதைச் சொன்னல் எனக்கும்தான் என்ற சிறுகதையின் மூலம் இளங் காளையர்களின் மூன்று அவுன்ஸ் மானத்தையும் வாங்கி விட்டார் கதாசிரியர் பொ. சண்முகநாதன்.

டி. பிள்ளையான்தம்பி, அருனானந்தம்.
சினக்குடா,

O O O O

பகவான் சாயிபாபா வருகை பற்றிய கற்பனை அற்புதம். அரியின் பதில்கள் பிரமாதம். கவிச்சரங்கள் பகுதியிலே ஆறு தலைப்பும் அழுகக் காட்சியளித்தன. காவியமானவள் இம்முறை நன்கு கனிந்திருந்தாள். சுடர் நண்பர் வட்ட அதிகரிப்பு மகிழ்வைத் தந்தது. "கலைமாமணியின்" பதிலும் பெற்று... அறியாததை அறிய வைத்தது, அ. கௌரிதாசன் அவர்களை அறிமுகம் செய்த சி. சிங்கராசாவிற்கு என் நன்றிகள். அறுவை மிகப் பலமாக இருந்தது. அரி அண்ணன் இம்முறை சிறிது அயர்ந்து விட்டார் கேள்வியாளர் எழுப்பி விடவும்.

வே. கருணநிதி. அமிர்தகழி,

O O O O

பொன்னரி அவர்களது கைவண்ணத்தில் உருவான அட்டைப் படத்தோடு தாங்கி வந்த புரட்டாதி கலை இலக்கிய இதழான சுடரை படித்தேன். சுடரில் இடம்பெற்ற அத்தனை அம்சங்களும் அறுசுவையுடன் விருந்து படைத்தது போல அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் அத்தனையும் அருமையிலும் அருமை.

செல்வி கலைமாமணி. காரைநகர்.

O O O O

சுதந்திரன் பத்திரிகையில் ஆவணிச் சுடர் எங்கும் விற்பனையாகின்றது என்ற விளம்பரத்தை படித்து விட்டு யாழ்நகர் எங்கும் தேடினேன் கிடைக்கவில்லை. இப்படி பத்து நாட்களாக திரிந்தேன். நான் மட்டுமல்ல இன்னும் எத்தனையோ வாசகர்கள். இதன் விளைவாக நான் சுடரில் இரண்டு பிரதிகள் வேண்டவேண்டிய நிலையும் ஏற்பட்டுவிட்டது. இப்போது சந்தா கட்டிவிட்டேன் மற்றைய வாசகர்களின் அவல நிலையை போக்க நடவடிக்கை எடுப்பீர்களா?

சிற்றம்பலம் ஸ்ரீ ஜீவா. வட்டுக்கோட்டை,

★ இச்சிரமத்தை தீர்ப்பதற்குள்ள ஒரே வழி, வாசகர்கள் தங்கள் கிராமங்களில் ஒரு விற்பனைப்பிரதி நிதியை ஏற்படுத்தி தருவதே. செய்வார்களா?

— ஆசிரியர் —

O O O O

பரிசுக்கதை பிரமாதம். நிலாதமிழின் தாசனின் உருவகக்கதை சிந்திக்கவும் சிரிக்கவும் வைத்தது பாராட்டுக்கள். இவை யாவையும் விட "பகடைக் காய்கள்" ஆசிரியர் தலையங்கம் நிச்சயம் யாவரையும் விழிக்க வைத்து சிந்திக்கத் தூண்டும். சத்திய சாயிபாபாவின் "பிரார்த்தனை" சிரிப்பைத் தூண்டி சிந்திக்கவும் வைக்கிறது.

அளவையூர். S. கௌரி.

O O O O

(இதன் தொடர்ச்சி 33 ஆம் பக்கம்)

வள்ளுவராண்டு: 2013
சுடர்: 8
ஒளி: 7
ஐப்பசி 1982

வெளியீடு:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு—12.

CHUDAR
(கலை இலக்கியத் திங்களிதழ்)

தொடக்கம்: சித்திரை 1975

தொலைபேசி: 23411

# ‘அகில இலங்கை’யும் தமிழீழ ஆணையும்

ஸ்ரீலங்கா ஜனாதிபதி தேர்தல் களத்தில் குதித்து தமிழ் மக்கள் மத்தியில் குட்டையைக் குழப்பிவரும் திரு. குமார் பொன்னம்பலம் யார்? அவரின் கடந்த கால அரசியல் நடவடிக்கைகள் என்ன? என்பதை தமிழ் மக்கள் அறிந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

திடீரென தமிழீழக்கொள்கை மீது இவருக்கு ஏற்பட்ட பற்றுதல் மிக வியப்பான ஒன்று. கடந்த 1977 பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழ அரசை நிறுவுவதற்கான ஆணையைப்பெற தேர்தலில் நின்றபோது அதற்கு எதிராக இவர் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டு படுதோல்வியடைந்தவர்.

அப்போது ‘ஐக்கிய இலங்கை’ என்ற கொள்கையை முன் வைத்து தேர்தலில் போட்டியிட்ட இவர் ‘வட்டமேஜை’ மகாநாடு மூலமே தமிழர் பிரச்சினையை தீர்க்கமுடியும் என்று மேடைக்குமேடை கூறி வந்தவர். அண்மைக்காலம் வரை இக்கொள்கைகளிலேயே ஊறித்திளைத்த குமார் இன்று புதுத்தோற்றத்தில் பவனி வருகிறார். நல்ல வேடிக்கை!

தமிழ் தேசிய மன்றத்தைக்கூட்டி தமிழீழ அரசின் யாப்பை வரைவதற்கான ஆணையை கடந்த பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தமிழீழ மக்கள் திட்டவட்டமாக வழங்கிவிட்டது உலகறிந்த செய்தி. இதன் பின்னர்தான் ஸ்ரீலங்காவின் இடதுசாரிக்கட்சிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும், திரு. வாசுதேவ நாணயக்காரவின் நவசமசமாஜக் கட்சியும் ரோஹண விஜேவீரவின் மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாக பகிரங்கமாக அறிவித்தன.

இக்கட்சிகளில் மக்கள் விடுதலை முன்னணியும், நவசமசமாஜக்கட்சியும் ‘பிரிந்துபோகும் சுயநிர்ணய உரிமையை’ தாம் வழங்கப்போவதாக பிரகடனப்படுத்தின. ஆனால் திரு. குமார் பொன்னம்பலத்தின் ‘அகில இலங்கை’ தமிழ்க்காங்கிரஸ் கட்சிக்கோ இந்தளவுதானும் அக்கறை ‘தமிழீழக் கொள்கை மீது’ பிறக்கவில்லை; பிறந்ததாக காட்டிக்கொள்ளவுமில்லை, மாறாக ஐக்கிய இலங்கை என்ற செத்துச் செல்லரித்துப்போன தன் பழைய பத்தாம் பசலிக் கொள்கையையே விடாப்பிடியாக பிடித்து நின்றது.

தனது கட்சியின் பெயரில் ஒட்டிக்கொண்டிருக்கும் ‘அகில இலங்கை’ என்ற பதத்தைத்தானும் அகற்ற முன் வராத நிலையில், தமிழீழத்தை அமைப்பதற்கும் தமிழீழ தேசிய மன்றத்தைக் கூட்டுவதற்குமான ஆணையை கோருவதற்கு ஜூனியர் பொன்னம்பலத்துக்கு என்ன தகுதி இருக்கிறது?

தமிழ் மக்களின் அங்கீகாரத்தைப் பெறாத செல்லாக் காசாகிவிட்ட தன் கட்சிக்கு ஒரு புதுத்தோற்றத்தைக் கொடுப்பதற்காகவே ஸ்ரீலங்கா ஜனாதிபதி தேர்தலை அவர் பயன்படுத்த நினைக்கிறார் என்பது வெளிப்படையான உண்மையாகும்.

எனவே, தமிழீழ சுதந்திர தனி அரசை நிறுவும் ஆணையை பல வருடங்களுக்கு முன்பே வழங்கிவிட்ட தமிழீழ மக்கள், ஸ்ரீலங்கா ஜனாதிபதி தேர்தலை முற்று முழுதாக நிராகரிப்பதன் மூலம் தாம் வழங்கிய ஆணையை மீண்டும் வலியுறுத்தி நிற்க வேண்டியது அவசியமாகும்.

# காலம் உன்னை பணிக்கட்டுமே

நெல்லை — எழிலன் [தமிழகம்]

பெண்களே உலகத்தின் கண் களடா — என
பெருமை யுடனிவர் பாடிடுவார்
தனக்கொரு பெண்மகள் பிறந்துவிட்டால் — இவர்
தலை கவிழ்ந்தேனோ நடக்கின்றார்.

காவிரி தாயென வணங்கிடுவார் — இவர்
காவியம் ஆயிரம் பாடிடுவார்.
தனக்கொரு பெண்மகள் பிறந்து விட்டால் — இவர்
தலைகுனிந்தேனோ திரிகின்றார்.

கலைகளை தாயென போற்றிடுவார் — இவர்
கன்னியை ஓவியம் தீட்டிடுவார்
தனக்கொரு கலைமகள் பிறந்துவிட்டால் — இவர்
கவலையால் ஏனோ அலைகின்றார்.

நிலவினை பெண்ணென நினைத்திடுவார் — அந்த
நினைவினை பாடலாய் புனைந்திடுவார்.
தனக்கொரு பெண்மகள் பிறந்துவிட்டால் — இவர்
நினைவிழந்தேனோ அலைகின்றார்.

நிலமகள் தனையும் வணங்கிடுவார்—இவர்
நிதமொரு பூசையும்செய்திடுவார்
தனக்கொரு பெண்மகள் பிறந்துவிட்டால் — இவர்
நிலை கொள்ளாம லேன் தவிக்கின்றார்.

பொன்னும் பொருளும் லட்சுமியாம் — என
பூசைகள் செய்தே பூரிப்பார்.
தனக்கொரு பெண்மகள் பிறந்து விட்டால் — இவர்
புறங்கை கோர்த்தே திரிகின்றார்.

பெண்களே உலகத்தின் கண்களென்று
பொன்மேனியை தழுவிய உறவினிலே
உதிர்ந்த மலரே பெண்குழந்தையடா — இதை
உணர மறுப்போன் மடையனடா.

பொன்னை பொருளை புகழுமுன்னே
கண்ணின் மணியாம் உன்மகளை
கல்விபுகட்டி காத்திடவே
காலம் உன்னை பணிக் கட்டுமே.

ஒரு குடுகுடுப்பையின் உளறல்:

# ★ கால பலன்கள் ★

– சிம்மம் –

## ஆர். பிரேமதாஸ:

ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து குழி பறிப்பதற்கென்றே ஒரு கும்பல் காத்திருக்கிறது. இக்கும்பலுக்கு உபாலியே தலைமை தாங்குவார். மிதுனத்தில் ராகுவும் கன்னியில் செவ்வாயும் இருப்பதால் விழிப்பாக இருக்கவேண்டிய கால கட்டமிது. ஆனந்த திஸ்ஸ டி அல்விசை விட லலித் அத்துலத் முதலியே உமது பரம எதிரியாக மாறலாம். உமது அலரி மாளிகை வாசம் பலருக்கு எரிச்சலைக் கொடுத்துக் கொண்டிருப்பதால் நிதானமும் அவதானமும் மிக மிகத் தேவை.

ஜே. ஆர். ஜனாதிபதியாக மீண்டும் விஸ்வரூபம் எடுத்தால் முதல் ஆபத்து உமக்கே. கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வவிநாயகரை மட்டும் நம்பிப் பயன் இல்லை. முதலில் நவக்கிரஹ தோஷ நிவர்த்தி பண்ணவேண்டும். அதைத் தொடர்ந்து 'பிரதமர் பதவி பாதுகாப்பு நூல்' ஒன்றை ஓதுவித்து இடுப்பில் கட்டிக் கொள்க!

## லலித் அத்துலத் முதலி:

கும்பத்தில் சூரியனும் மிதுனத்தில் கேதுவும் நிலை கொண்டிருப்பதால் மேடைக்கு மேடை வாய் கிழிய கத்தித் திரிய வேண்டிய பரிதாப நிலை. வர்த்தக அமைச்சரான நீர் அரசியல் வியாபாரத்தையும் கருவாட்டு பிஸ்னஸாக நினைத்துவிட்டால் அது நாற்றமெடுக்கும் அரசியலாக பின்னர் மாறிவிடலாம். உமது அரசியல் சகாக்களுக்கு குழி பறிக்காமல் நேர்மையான வர்த்தகத்தில் ஈடுபடுக. ஜெயவர்த்தனீஸ்வரரை சாஸ்டாங்க பூசை செய்து வருதல் மட்டும் பயன் தராது. புரட்டாதிச் சனி விரதம் ஆரம்பித்து விட்டதால் பிரதமரையும் 'காக்காய்' பிடித்து சனீஸ்வரரின் அனுக்கிரகத்தையும் பெறுதல் நலம். ஏழு தடவைகள் எள் எரித்து வந்தால் நினைத்த காரியம் கைகூடலாம்.

## மைத்திரிபால சேனநாயக்கா:

ஆடி மாத சுடரில் நாம் கூறியபடி 'சிறிமா அம்மையாரின் பாதக் கமலங்களில் வீழ்ந்து அஷ்ட நமஸ்கார பூஜை செய்திருந்தால் இந்த அவல நிலை வந்திருக்காது. கட்சிக் கொடி, கைச்சின்னம், தலைமையகம் அனைத்தையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் நிலை, ஜே. ஆரை நம்பியதால் உமக்கு வந்த வினை. இனியாவது சுயபுத்தியோடு நடந்து அநுராவை அரவணைத்து அம்மையாரின் அருட் கடாட்சத்தை பெறுக! நடிகர் விஜய குமாரதுங்கவின் ஆத்திரத்தை அகற்ற ஆயிரத்தியெட்டுத் தடவை தோப்புக்கரணம் போட்டு தலையிலும் பல தடவைகள் குட்டிக் கொள்க! (இதை தனியாகச் செய்யாமல் சகாக்களான விஜேசிறி, சூரியப்பெரும, ஹலீம் இஷாக் கூட்டத்தோடு சேர்ந்தும் கோவிந்தா போடலாம்.)

## நெவில் பெர்னாண்டோ:

சிறில் மத்தியூ என்ற பெருச்சாளியை நம்பி அடைமழை கால தவளை போல் கத்திக் கத்தியே உமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை பறிகொடுத்தீர். ஏழரை நாட்டுச்சனி இப்போதைக்கு உம்மை விட்டு விலகும் சாத்தியம் இல்லை. அதனால்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற சகதிக்குள் போய் நுழைந்திருக்கிறீர். உமக்கு பொருத்தமான இடம் அதுதான். தொடர்ந்தும் அங்கேயே இருந்து உமது வாயாலேயே உம்மை அழித்துக் கொள்ள வேண்டும். உம் போன்றவர்களின் கத்தல்களால் எத்தனை தமிழ் உயிர்கள் அழிந்திருக்கின்றன. அந்த பாவம் உம்மைச் சுற்றிச் சுற்றியே வட்டமிடும். அரசியல் எதிர்காலம் உமக்கினி இல்லை. வெட்டிக்கிழிக்கும் அறுவை வைத்தியத் தொழிலையே கைக் கொள்வது உசிதம்!

# அரி பதில்கள்

கதிர் தம்பிராஜா.
மட்டக்களப்பு.

கே: ஜனாதிபதி தேர்தலைக் கண்டு யூ. என். பி. பயப்படவில்லையாமே? உண்மையா?

ப: பணமுதலைகள் பல பக்கபலமாக இருக்கும் போது பயம் எதற்கு? தேர்தல் குளத்தில் சுளியோடி மீன் பிடிப்பதற்கு இப்போது அவைதானே தேவை.

கே: அமெரிக்காவில் சமீபத்தில் நிகழ்ந்த தமிழீழ மாநாட்டில் எடுத்த தீர்மானங்களை அமுல் நடத்தக் கூட்டணி முன் வருமா?

ப: சந்தேகமே! தமிழீழப் போராளிகளை சாடுவதில்தான் அமிர் அண்ணன் மிகத்தீவிரமாக இருக்கிறார். கையாலாகாத் தனத்துக்குப் பெயர் சாணக்கியமாம். எப்படியிருக்கிறது சப்பைக்கட்டுவாதம்?

கே: சுடரில் மருத்துவம் சம்பந்தமான விடயங்களுக்கு இடம் ஒதுக்கினால் என்ன?

ப: நல்ல டாக்டர் ஒருவரைப்பார்த்துச் சொல்லுங்கள். ஒதுக்கித்தர நான் தயார்.

கே: சுடர் என்ற பெயர் எண் சாத்திரப்படி 21 (Chudar — 356412) வருகிறது. கூட்டெண் — 2-1-3. அரி என்ற பெயர் (Ari — 121) 4 வருகிறது. 3 க்கு 4 ஒத்துப் போகாதே? உங்கள் பெயரைப் பொருத்தமாக மாற்றுவீர்களா?

ப: புனைபெயர் பொருந்தாவிடினும் இயற்பெயர் நன்றாக பொருந்துகிறதே அது போதாதா? அதுசரி, இந்த எண் சாத்திரத்தில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது மனவுறுதி பலமாக இருந்தால் அதுவொன்றே போதுமே

கே: மீராகேணியில் ஈராக் நாட்டு 65 லட்சம் ரூபா உதவியுடன் 100 வீடுகள், ஒரு பள்ளிவாசல், ஒரு பள்ளிக்கூடம் அமைத்திருக்கிறார்களே? இப்படி ஒரு, தமிழ்க்கிராமம் உருவாக்கப்பட எமது பெரிய்ய்ய மந்திரிமார்களால் முடியுமா?

ப: உங்களது கோவில் மந்திரியால் உருப்படியாக ஒரு கோவிலைக் கூட கட்ட முடியவில்லையே. அப்புறம் எப்படி குடியிருப்பு மனைகளை கட்டுவது?

கே: மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தல் எப்போதாம்? எனது காதுக்குள் ரகசியமாகச் சொல்லுங்கோவன்?

ப: அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் அமைச்சர்கள் இருவரும் தோற்கடிக்கடிக்கப்பட்ட பின் நடைபெறலாம்.

M. S. V. கருணாநிதி.
மட்டுநகர்.

கே: அரி அவர்களே உங்கள் வயது எனக்கு தெரியாது நீங்கள் மணந்தால் அல்லது இறந்தால் நாங்கள் என்ன செய்யவேண்டும்?

ப: அனுதாபப் படவேண்டும்.

அ. தயாபரி.
கேணியடி.

கே: "தர்மிஷ்டர்களின்" ஆட்சியில் தமிழ் மக்கள்' தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்படுகிறார்களே?.......

ப: இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதென்றால் மக்கள் எழுச்சி பெற வேண்டும்.

கே: ஜனாதிபதி அடிக்கடி "நேசக்கரம்" நீட்டுகின்றாரே எதற்காக?

ப: வேறு எதற்கு? நன்றாக நசுக்குவதற்காகத்தான்!

மா. வில்வக்கோன்.
அச்சுவேலி வடக்கு.

கே: "திராவிட" என்ற சொல்லை முன் வைத்துள்ள இயக்கத்தினர் தெலுங்கன், மலையாளி, தமிழன், கன்னடன் என்று பேதம் உரைத்தல் நீதியாகுமா?

ப: இல்லை. அறிஞர் அண்ணாவின் மறைவோடு கழகக்கண்மணிகளும் தம் கட்டுப்பாட்டை கைவிட்டு விட்டமை வேதனை தரும் செயலாகவே இருக்கிறது.

எஸ். ஜீவா.
கொக்குவில்.

கே: சென்ற பொதுத் தேர்தலிலே கூட்டணி சர்வசன வாக்கெடுப்பு நடாத்தும் போது கூட்டணி வேட்பாளரை எதிர்த்து போட்டியிட்டு விட்டு இப்போது ஜனாதிபதி தேர்தலில் தமிழ் ஈழத்துக்கு சர்வசன வாக்கெடுப்பு நடாத்த போகின்றாராமே குமார். இவரை எப்படி அழைப்பது? ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: "அரசியல் கற்றுக்குட்டி" என அழைக்கலாமே. இந்த 'அகில இலங்கை' அரசியல் வேடதாரிகளை தமிழ் மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

**சிவமணி மாணிக்கவாசகர்**
காரைநகர்.

கே: அரிஅண்ணரே! உங்களுக்கு பிடிக்காத கெட்ட பழக்கம் என்னவென்பதை சொல்லுவீர்களா?

ப: உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களைக் கண்டால் எனக்கு பிடிக்கவே பிடிக்காது. அப்படிப் பட்டவர்களின் உறவை தவிர்த்து விடுதல் மிக நன்று.

செல்வி கலைமாமணி.
காரைநகர்.

கே: ஐ. தே. கட்சியின் அரசியலமைப்புக்கு பொருத்தமான பெயரொன்றை சூட்டுங்கள் பார்க்கலாம்.

ப: தம்மிஷ்ட அகராதி!

கே: அரிஅண்ணா! உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ன?

ப: கடைசி காலத்திலாவது தமிழீழத்தில் வாழ்ந்துவிட்டு நிம்மதியாக 'போய்ச் சேர' வேண்டும் என்பது.

**ப. கோவிந்தராஜன்.**
கிளிநொச்சி.

கே: ஜனாதிபதி தேர்தலின் முடிவு எப்படிப் பட்டதாக அமையும்......?

ப: யானைக்கும் அடி சறுக்கலாம்.

கே: சிறு அசம்பாவிதங்கள் நடந்தாலும் நம் தமிழகமான யாழ்நகர் தாக்கப்படுவது ஏன்......?

ப: ஸ்ரீலங்காவின் அரசகாடையர் நம் மண்ணை ஆக்கிரமித்திருப்பதால்.

**''கலைராஜன் வவுனிநகர்''**

கே: தமிழ் ஈழத்தை மீட்பதற்காக நம் சகோதரர்கள் எத்தனைபேர் தங்கள் உயிரையே தியாகம் செய்திருக்கிறார்கள். அந்த அமரர்களுக்கு நீங்கள் கூறும் வாழ்த்துக்கள் என்ன...!

ப: "புரட்சிப் பூக்களே! நீங்கள் மீண்டும் மீண்டும் நம் தமிழீழ மண்ணில் மலர்ந்திட வேண்டும்..."

கே: தார்மீக அரசின் தலைவர், ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்தவுடன், பொதுத் தேர்தலையும் வைக்கப்போகிறாராமே...?

ப: தேர்தலைப் பற்றி நமக்கேன் கவலை. ஸ்ரீலங்கா ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிப்பது போல் ஸ்ரீலங்கா பாராளுமன்றத் தேர்தலையும் பகிஷ்கரித்திட நம் தலைவர்கள் முன்வரல் வேண்டும்.

**த. சிவநாதன்**
செட்டிகுளம்.

கே: அனுராதபுரத்தில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து பேசிய தர்மிஷ்ட அரசர், தமிழ்த்தலைவர்கள் தமிழீழம் கேட்டால் யாழ்ப்பாணத்துக்கு வந்து சத்தியாக்கிரகம் செய்வாராமே. ஆரம்பத்திலேயே தமிழை குறிபார்த்து பேசிய தலைவரின் உள்நோக்கம் என்ன?

ப: உறவாடிக் கெடுப்பது.

**ரி. கலாமதி,**
கல்லடி, மட்டுநகர்.

கே: ஐக்கிய தேசிய கட்சியுடன் எமது தமிழர் விடுதலை கூட்டணி தலைவர்கள் இரகசிய ஒப்பந்தங்கள் செய்திருப்பதாக பலர் பத்திரிகையில் தெரிவிக்கின்றனரே இது உண்மையாக இருக்குமா?

ப: நெருப்பு இல்லாமல் புகைச்சல் வருமா? உண்மைகள் சில வேளை ஊமையாகி விடுவதுமுண்டு.

கே: தியாக வாழ்வு வாழ்ந்து தமிழ் ஈழ இலட்சியத்திற்காக தம்மையே அர்ப்பணித்த குட்டிமணி ஜெகனுக்கு தார்மீகம் என்று கூறிக் கொள்ளும் இவ் அரசு மரண தண்டனை வழங்கியது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: குட்டிமணி, ஜெகன் ஆகியோரின் தண்டனையைக் கேட்டு நீதி தேவதை கூட கண்ணீர் வடித்திருப்பாள். குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை வைத்து மரண தண்டனை விதிக்கக்கூடிய படுபயங்கரமான காட்டு மிராண்டிச் சட்டம் தென்னாபிரிக்காவில் கூட இல்லையாம். தார்மீகரின் ஆட்சியில் 'தர்மம்' படாத பாடு படுகிறது.

எம். எஸ். வெண்தா
செட்டிக்குளம்.

கே: தோட்டப்பகுதி மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வல்ல ஒரே தலைவர் ஜே. ஆர். என்று செல்லசாமி கூறுகிறாரே —?

ப: அப்படியா? இத்தனை காலமும் அப்பிரச்சினை தீராமல் இருப்பதற்கு யார் காரணமாம்?

கே: நான் ஜனாதிபதி பதவிக்கு வந்தால் 24 மணி நேரத்தில் தமிழர் பிரச்சினைகளை தீர்க்க எம்மால் முடியும் என்று றோகணவிஜயவீர கூறுகிறாரே?

ப: அரசியல் கற்றுக்குட்டிகளின் ஆரம்பப் பேச்சுகள் இப்படித்தான் இருக்கும். ஆட்சிக்கதிரையில் அமர்ந்த பின்புதான் கழுத்தறுப்புகள் ஆரம்பிக்கத் தொடங்கும்.

யாழ்நாதன்,
நிலாவெளி

கே: அண்ணா! "தமிழ் ஈழம்தான் எனது இலட்சியம்" என்று சந்தி சந்தியாய் நின்று கத்திவிட்டு இப்போது கட்டுப் பணமும் இழக்க வேண்டிய நிலையை எதிர்பார்த்து ஜனாதிபதி தேர்தலில் இறங்கியுள்ளாரே எங்கள் ஜூனியர் பொன்னம்பலம்! இவரைப் பற்றி நீங்கள்......?

ப: தன் 'பலத்'தை பரீட்சிக்க துணிந்திருக்கிறார் குமார் பொன்னம்பலம். பாவம் அம்பலமாகப் போகிறார்.

கே: வீரத்திலகங்கள் குட்டிமணி, ஜெகன் இவர்களின் வாழ்வுக்கு விடிவு கிடைக்காதா? அண்ணரே!

ப: கூட்டணித் தலைமையின் உறுதியான போராட்டமே அவர்களின் விடிவுக்கு வழி சமைக்கும்.

# உதவிகள்



சிதம்பர திருச்செந்திநாதன்

ஐந்து சிறுவர்களுடன் தான், அந்த நிலையத்தைத் தொடங்கினோம். மனோ வளர்ச்சி குன்றிய அங்கவீன மான, அவர்களை பராமரிப்பது முதலில் பிரச்சினையாக இருக்கவில்லை.

எங்கள் நிலையத்திடம் அப்போது ஓரளவு நிதி இருந்தது. அத்தொகையுடனும், ஊரிலும் வேறு சில இடங்களிலும் சேர்த்த பணத்தைக்கொண்டும் அவர்களை பராமரித்தோம்.

ஆனால்—

ஒரு வருட காலத்தினுள், மேலும் பல சிறுவர்களை நிலையத்தில் சேர்த்தார்கள். அவ்வாறு சேர வருகின்ற சிறுவர்கள் யாரையுமே நாங்கள் மறுக்க முடியாது. எல்லோரும் ஒரே தன்மையான பிரச்சினைகளைக் கொண்டவர்கள் அங்கவீனர்கள். மனோ வளர்ச்சி குறைந்தவர்கள்.

அவர்கள் எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும். அவர்கள் அனைவரையும் பூரணமான மனிதர்களாக மாற்ற வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகின்றோம்.

அதற்கான மனோ வலிமையும், உறுதியும் எங்களிடம் இருக்கின்றது. ஆனால், தற்போது வசதி இல்லை. நிலையத்தில் சிறுவர்கள் சேர்ந்த அளவு வசதிகள் பெருகவில்லை. அதற்காக நாங்கள் சோர்ந்து போய் விடவும் இல்லை. எப்படியோ, எங்கள் பொருளாதார பிரச்சினைகளை சமாளிக்க முனைகின்றோம். ஆனாலும், யாராவது வசதி படைத்தவர்கள் உதவி செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

நிலையத்தின் வாசலில், கார் ஒன்று வந்து நின்றது. பருத்த உடம்புடைய ஒருவரும் மெலிந்த தோற்றமுடைய இன்னொருவருமாக இருவர் இறங்கினார்கள்.

இம்மாத
பரிசுக்
கதை

நாங்கள் அவர்களை வரவேற்றோம்.

"வாருங்கள்"
"வணக்கம்"
"வணக்கம்"

"என்னைத் தெரியும்... தானே... நான் தான் சண்முகம்"

"ஓமோம்... உங்களைத் தெரியாமல்... வர்த்தக உலகின் முக்கியமான மனிதர் அல்லவா நீங்கள். உங்களை வரவேற்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்"

"இந்த நிலையத்தை பார்க்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு நீண்ட நாட்களாக இருந்து வந்தது. ஆனால் நேரம் தான் கிடைக்கவில்லை. வியாபாரத்துடன் தொடர்புடைய ஆட்களுக்கு நேரம் கிடைப்பது குறைவுதானே"

"ஓமோம்..."

"இன்றைக்கும் நேரம் கிடைக்கேல்லைத்தான். வேறை ஒரு அலுவலை கான்சல் செய்துபோட்டு இஞ்சை வந்தனான்"

"நல்லது..."

"இந்த நிலையத்தை, வெகு சிறப்பாக நீங்கள்— நடத்துவதாக நான் கேள்விப் பட்டுள்ளேன். அங்கவீனர்கள், மனோ வளர்ச்சி குன்றியவர்கள், முழுமையான மனிதர்களாக மாறுவதற்கு தாங்கள் செய்யும் தொண்டு மகத்தானது"

"ஏதோ... எங்களால் செய்யக் கூடியதை செய்ய முனைகிறோம் வாருங்கள்... சிறுவர்களைப் பார்க்கலாம்"

"சரி... பார்ப்போம்..."

"இந்த சிறுவன், இங்கு வரும்போது மனோவளர்ச்சி குறைந்தவனாகத்தான் இருந்தான். பிறகு நாங்கள் கொடுத்த பயிற்சியின் காரணமாக நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது"

"ஓ அப்படியா..."

"கால் முடமான, இந்தச் சிறுவன், இயற்கையாகவே படங்கள் கீறுவதில் நல்ல ஆர்வம் உடையவன். நாங்கள் பயிற்சி கொடுத்தோம். இப்

போது அழகான படங்கள் வரைகின்றான்.

"இந்த படங்கள் எல்லாம் அவன் வரைந்த படங்கள் தான் -"

"ஓ எவ்வளவு அழகான படங்கள். அபூர்வமான கலைப் படைப்புக்கள் -"

"இப்படி வாருங்கள். இந்த இரண்டு சிறுவர்களுக்கும் கண் தெரியாது. ஆனால் அழகாக கூடைபின்னுவார்கள் அதற்கான பயிற்சியை நாங்கள் அளித்துள்ளோம்."

"அற்புதம் - என்னால் நம்பவே முடியவில்லை - மிக மிக பெருமைப் படத்தக்க சேவையை நீங்கள் - செய்கின்றீர்கள். சேவை என்பதை விட தியாகம் என்றே சொல்லலாம். உண்மையில் - நீங்கள் தான் உண்மையான மனித தெய்வங்கள்"

"நீங்கள் அப்பிடிச் சொல்லக்கூடாது - சாதாரணமான ஒரு தொண்டினைத்தான் - நாங்கள் செய்கின்றோம். அங்கவீனமானவர்களும், மனவளர்ச்சி குறைந்தவர்களும் சமுதாயத்தில் ஒரு பிரிவினரே அவர்களையும் - சாதாரண மனிதர்களைப் போல செயல்பட வைக்கவேண்டும். அதுதான் முக்கியம் - அதனைத்தான்-செய்கின்றோம். நாட்டில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும். இப்படியானவர்களில் கூடிய அக்கறை எடுத்து ஏதாவது செய்ய முனைந்தால், அத்தகையவர்கள் முன்னேறி விடுவார்கள் இத்தகைய நிலையங்களும் - தேவையில்லை"

"நீங்கள்-சொல்லுவது - சரிதான் - ஆனால் அதை செய்வதற்கு பரந்த உள்ளம் வேண்டும். நிறைந்த பொறுமை வேண்டும். அவை யெல்லாம் எல்லோருக்கும் வராது.

"வாருங்கள் - எமது அலுவலகத்துக்கு செல்லலாம்"

"ம்......"

"இப்படி அமருங்கள்"

"நீங்களும் - அமருங்கள்"

"நல்லது - இந்தாருங்கள் - குளிர்பானம் - அருந்துங்கள்"

"நன்றி......உங்களது இந்த நிலையத்தின் பொருளாதார நிலை எப்படி -யாராவது உதவி செய்கின்றார்களா"

"தற்போது நிதிநிலைமை மிக மோசம் - ஆரம்பத்தில் பரவாயில்லை. சிறுவர்கள் சேரச்சேர-பொருளாதாரப் பிரச்சனை கூடிக்கொண்டு போகின்றது. ஆனாலும் - ஒருமாதிரி சமாளிக்கின்றோம்......"

"ஒருவருடைய உதவியும்-இல்லை"

"சிலபேர் -உதவி செய்கின்றார்கள்-சிறிய உதவிகள்தான், பாரிய உதவிகள் - எமக்கு கிடைப்பதில்லை......"

"ஓ..... அப்படியா - மிகுந்த மனவருத்தத்துக்குரிய விடயம் தான். நீங்கள் யாரையாவது தனிப்பட்டமுறையில் சந்தித்து உதவிகள் - கேட்கலாமே"

"சில பேரிடம் அவ்வாறு வேண்டுகோள் - விடுத்தோம் ஆனால் எல்லோருக்கும் உதவி புரியும் மனநிலை இல்லையே ..."

"பாரிய உதவிகள் இல்லாமல் எந்த நிலையமோ - நிறுவனமோ வளர முடியாதே - பாருங்கள் - எங்கள் நாட்டைப் போன்ற குறை விருத்தி நாடுகளுக்கு கூட வளர்ச்சி அடைந்த மேற்கு நாடுகள் - உதவி புரிந்தால்தான் - முன்னேற முடியும்......"

"ஓமோம் நீங்கள்-கூறுவது உண்மைதான்".

"நான் - இப்போது - ஐயாயிரம் ரூபா - உதவி செய்கின்றேன் பின்பும் - வேறு உதவிகள் செய்ய முனைகின்றேன்"

"மிகவும் - நல்லது - தங்களுக்கு எமது நன்றிகள்"

"இவை போன்ற நிலையங்களுக்கு உதவி செய்யாவிட்டால் நாங்கள் - இவ்வளவும் உழைத்தும் - பிரயோசனம் இல்லை. மனிதப் பிறவி எடுத்த தன் உண்மையான பயனை உங்கள் நிலையத்தைப் போன்ற நிறுவனங்களுக்கு உதவி செய்வதன் மூலம்-அடையலாம்...... மனேச்சர் - செக் புத்தகத்தை-தாரும்...ம்.. செக் வேண்டாம் ஐயாயிரம் ரூபாவுக்கு - நல்ல -பயன் உள்ள பொருட்களை - தருகின்றேன் -உங்களுக்கு ஆட்சேபனை இல்லைத்தானே ..."

"இல்லை - நீங்கள் - எப்படியான உதவியும் - செய்யலாம் பண உதவியோ - பொருள் உதவியோ பரவாயில்லை."

"ஐயாயிரம் ரூபாவுக்கும் நல்ல-ஊட்டச் சத்துள்ள-பால் மாவகைகளையே- தருகின்றேன்- இங்குள்ள சிறுவர்களுக்கு - அவை மிக பயனுள்ளவையாக இருக்கும்"

"நல்லது..."

"இன்று பின்னேரம் அனுப்பிவைக்கின்றேன். சரி தானே எனக்கு வேறு அலுவல்கள் இருக்கின்றன - நான் வருகின்றேன்"

"இங்கு வந்து உரையாடி- எமக்கு-உதவி செய்த தங்களுக்கும் - எமது - நன்றிகள்"

முதலாளி சண்முகமும் அவருடைய மனேச்சரும் - விடைபெற்றுப் போனார்கள்.

"மனேச்சர் - ஸ்ரோரில - இருகின்ற அந்தப் பழுதடைந்த பொருட்களை - பின்னேரம் - அனுப்பிவிடும் - அது - இருந்துதான் - எங்களுக்கு என்ன பிரயோசனம் -" என்றார் - முதலாளி சண்முகம்.

மனேச்சர் சிரித்துக் கொண்டு.

"நீங்கள் முன்பு சொன்னது போல-சில குறைவிருத்தி நாடுகளுக்கு மேற்கு நாடுகள் - செய்யும் உதவிபோல........." என்றார்.

( யாவும் கற்பனை )

# அரட்டை

ஸ்ரீலங்கா ஜனாதிபதி ரேஸ் ஓட்டத்தில் ஜே. ஆர். என்ற ஜொக்கிக்கு எதிராக பொது ஜொக்கி ஒருவரை நிறுத்தும் முயற்சி புஷ்வாணமாகிவிடும் என்பது பலரும் எதிர் பார்த்தது தான், ஆனால் சமசமாஜ ஜொக்கியான கொல்வின் கடைசி நேரத்திலாவது ஸ்ரீல. சு. குதிரைக்கு விட்டுக் கொடுப்பார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் இது நடக்கவில்லை. சமசமாஜக் குதிரை காலை வாரி விட்டது.

இதன் பின்னணியில் சில சுவாரஸ்யமான சம்பவங்கள் புதைந்து போய்க் கிடப்பதாக சில புகைச்சல்கள்.

சமசமாஜக்கட்சி ஆதரவாளர்களின் வாக்குகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைக்காமல் செய்துவிடவேண்டும் என்பது ஜே. ஆரின் — சாணக்கிய தார்மீக தந்திரங்களில் ஒன்றாகும். இதனால் கொல்வினையும் ஓட்டப் பந்தயத்துக்கு வரிந்து கட்டும்படி தூண்டிஆசைவார்த்தைகாட்டி அதில்வெற்றியும் பெற்று விட்டார் என்று கூறப்படுகிறது.

'தன்னோடு போட்டிக்கு நிற்கும் அனுபவமும் தகுதியும் படைத்தவர் கொல்வின் ஆர். டி. சில்வா ஒருவரே' என ஜே. ஆர். மேடைக்கு மேடை நற்சான்றிதழ் வழங்கி வந்ததன் பின்னணி வேறு என்னவாக இருக்கலாம்?

தேர்தலில் வெற்றிபெற்றதும் அரசியலமைப்பு திருத்தப்பட்டு உபஜனாதிபதி பதவி ஒன்றை ஏற்படுத்தி, அந்தப்பதவியை எதிர்க் கட்சி ஒன்றுக்கு வழங்குவதன் மூலம் தேசிய அரசாங்கம் ஒன்று அமைப்பதே தார்மீகரின் திட்டமாம்.

திரு. கொல்வின் பார்த்து வாயூறும் 'மிட்டாய்' இதுவாக இருக்குமோ?

திரு. மைத்திரிக்கு நேர்ந்த கதியை அவர் நினைவு கூர வேண்டும்.

'ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தால் திரு. மைத்திரிபாலசேனநாயக்காவையே பிரதம மந்திரியாக நியமிப்பேன்' என தர்மிஷ்டர் ஆசை காட்டி, அதன் மூலம் கட்சியை இரண்டாக பிளவு படவைத்து கட்சி தலைமையகத்தையும் மைத்திரி கோஷ்டியிடம் கொடுத்து கடைசியில் 'அம்போ' என கைவிட்டு மோசஞ் செய்துவிட்ட சம்பவம் பலருக்கு பாடமாக அமைய வேண்டும்.

* *

ஸ்ரீலங்காவின் அரசியல் அமைப்பின் படி 50 வீத வாக்குகளுக்கு மேல் பெறும் அபேட்சகர்தான் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற முடியும். இவ்விதம் 50 சதவீத வாக்குகளை எவரும் பெறவில்லையென்றால் இரண்டாவது மூன்றாவது விருப்பத்தேர்வு கணக்கிடப்பட்ட பின்பே முடிவு அறிவிக்கப்பட வேண்டும். எனவே இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தேர்வு மிக முக்கியமான ஒன்றாகும். ஆனால் அமைச்சர் லலித் அத்துலத் முதலியோ. தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் எல்லாம் முதலாவது வாக்கை ஜே. ஆருக்கு அளித்தால் மட்டும் போதும். 2வது 3வது வாக்குகளை எவருக்கும் அளிக்கத் தேவையில்லை என பேசி வருகிறார்.

எவ்வளவுதான் எம்பிக் குதித்தாலும் ஐம்பது சத வீத வாக்குகளுக்கு மேல் ஜே. ஆரால் பெறமுடியாது என்ற பேருண்மையையும் இரண்டாவது விருப்ப வாக்குகள் கொல்வினுக்கோ, அன்றி கொப்பேகடுவவுக்கோதான் அதிகமாக விழப்போகின்றன என்றமனப்பயத்தையும் வெளியே காட்டித்திரியும் வர்த்தக அமைச்சர் நிச்சயமாக அரசியல் வியாபாரத்திலே நஷ்டமடையவே போகிறார்.

* * *

எண்சோதிடத்தில், தான் அதிக நம்பிக்கையுடையவர் என்பதை வெளிப்படையாகவே தார்மீகர் காட்டி விட்டார். ஏதோ ஒரு கூட்டத்தில் அவர் பேசும்போது "17ந் தேதி பிறந்த தனக்கு 8ம் இலக்கமே அதிர்ஷ்டகரமானது என்றும் அதனால்தான் ஸ்ரீலங்காவின் எட்டாவது பிரதமராக தான் பதவி, வகித்ததாகவும்" கூறியிருக்கிறார்.

அதனால்தான் ஜனாதிபதி வேட்பு மனுவையும் தனது பிறந்த தினத்திலேயே தாக்கல் செய்யக் கூடியதாக ஏற்பாடு செய்திருக்கிறாரோ?


உச்சியில் ஏற்றி பின் படுகுழியுள் வீழ்த்தும் ஒரு இலக்கம் இருக்கிறதென்றால் அது எட்டாம் இலக்கம்தான். இதை எந்த எண் சோதிட நிபுணரும் மறுக்க முடியாது.

ஸ்ரீமாவோ அம்மையாரும் கூட இந்த எட்டாம் இலக்க ராசிக்காரர்தான். தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர்., எதிர்க்கட்சிமுதல்வர் அண்ணன் அமிர் எல்லோரும் இந்த எட்டாம் இலக்க ராசிக்காரர்கள்தான். சிறிமா அம்மையார் எப்படி எப்படியெல்லாம் கொடி கட்டிப் பறந்தவர். இன்று எப்படியிருக்கிறார்?

நாளை ஜே. ஆருக்கும் இப்படி நடக்கலாம்தானே!

# அவசரங்களும் அவதிகளும்...

மங்கை. கங்காதரம்




அந்த நீலவானின் நிர்மலமான தோற்றம் அவள் மனதில் இல்லை. சற்று முன்னரெல்லாம் மழைக்கான மூட்டத்திலிருந்த வானம் கழுவித் துடைத்தமாதிரி அத்தனை வெளிப்பாக இருந்தது. ஆங்காங்கே மின்மினிப் பூச்சிகளாய் கண் சிமிட்டும் தாரகைகளிடையே பவனிவரும் எழில் நிலா...... அவற்றைத் தழுவிச் செல்லும் வெண்பஞ்சு முகிற் கூட்டம்..... வெகு நேரமாய் அடுக்களைத்திண்ணையில் இருந்தபடி ரசனையற்று பார்த்தாள் புனிதா.

தன் மனஇருள் அகல வழியில்லாத பெருமூச்சுடன் மனம்' சலித்து எரிச்சலடைந்தவளாய் எழுந்து உள்ளே போனாள். அடுப்பிலிருந்ததை இறக்கி வைத்து விட்டுச் சின்னஞ்சிறிசுகளை அழைத்து சாப்பாட்டைக் கொடுத்தாள்.

"நாள் தவறாமல் இதுகளுக்கு இப்பிடியே ஆக்கிப் போட்டுக் கொண்டு அத்தியாவசிய தேவைக்காய் கையொடிய தட்டச்சு இயந்திரத்தை அழுத்திக் கொண்டு - தடம் புரளாத ரயில் மாதிரி இந்த வாழ்க்கையை ஓட்டுவதால் என்ன சுவராஸ்யம் இருக்க முடியும் என்னவோ பிறந்துவிட்டோம் என்பதற்காக வாழ்நாள் பூராவும் எந்த மாற்றத்திற்கும் ஆளாகாமல் — என்ன வாழ்க்கை இது...?" அவள் மனச்சிறையினுள் நடக்கும் போராட்டம் இது.

இளங்கதிர்.

பொழுது விடிந்தால் வழமை போல் அவசரமவசரமாய் அடுக்களை அலுவல் முடித்து தன் கீழுள்ள பாமா, ரஞ்சி, ராணி, ரமணி, கடைக்குட்டிகோபு ஒவ்வொருவரையும் பொறுமைகடந்து கவனித்து, அதன் பின் தன் ஒதுக்கிடம் வந்து ஆசுவாசப்படுத்திக்கொள்ள நேரமில்லாமல் உள்ளதைக் கொண்டு அலங்காரம் பண்ணிக் கொள்வதாக எண்ணித் தன்னை அலங்கோலப்படுத்திக் கொண்டு அரை மைலுக்கு அப்பாலுள்ள யாழ்ப்பாணம் பஸ் செல்லும் சந்திக்கு ஓட்டமும் நடையுமாய் நடந்து காத்திருக்காமல் பஸ் ஏறி அலுவலகம் வந்து பெரிதாய் மூச்சுவிட்டு......

வீட்டில் அவஸ்தை, பஸ்ஸினுள் அவஸ்தை, போகும் இடங்கள், அலுவலகம் இப்படி எல்லாம் ஏதோ ஒரு விதத்தில் அவளை அலுப்படைய வைத்தது.

நான்கு வருடங்களாக இப்படித்தான் அவளின் வாழ்நாள் கழிந்து கொண்டிருந்தது. ஆரம்பத்தில் ஆர்வமாய், ஆசையாய் வேலைக்கென்று புறப்பட்ட காலம் போய் இப்போ வேண்டாம் என்ற நிலையில் வீட்டுநிலைமை உணர்ந்து செய்தாள். கல்விப் பொதுத்தராதர சாதாரண படிப்பின் பின்னால் தட்டச்சு பழகியதால் அந்த அருமை பெருமையாக அந்த வேலை அவளுக்கு கிடைத்தது. அவளின் அந்த சொற்ப சம்பளத்தை நம்பி எட்டு ஜீவன்கள் அந்த வீட்டில். இதை விட்டால் தந்தையின் சோம்பேறித்தனத்தை மிஞ்சி வரும் பிந்திய தோட்ட வருமானம் அது அவர் கையில்தான்...

"அந்த நாட்களில் இந்த குடும்பக்கட்டுபாடு இருந்திருந்தால் இப்பிடி கண்ணையும் மூடிக்கொண்டு வதவதவென்று பெத்துதள்ளியிருப்பார்களா..? இப்போ மட்டுமென்ன......? இருந்தும் பயன்படுத்தத் தெரியாதவர்களாய்...! ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்பார்கள். இங்கு ஐந்து பெண்களை அடுத்தடுத்துப் பெற்ற ஆண்டியோ குடியும் கும்மாளமுமாய்—சே! எத்தனை அவஸ்தையான வாழ்க்கை" அவள் பலதடவை எண்ணிக்கொண்டவைதான்.

"என்னடா..! இது போல்லாத வாழ்க்கை..."? என்ற மாதிரி —

## தேன் உப்புக்கரிக்குமா?

தேனீக்கள் சேர்க்கும் தேன் அனைத்துமே இனிக்கும் என்று நாக்கைச் சப்பிக்கொண்டே இருக்கவேண்டாம். சிலவகைத் தேனீக்கள் சேர்க்கும் தேன் உப்புக்கரிக்கும். பிரேஸில் நாட்டில் கோயாஸ் மாநிலத்தில் இத்தகைய தேனீக்கள் ஏராளமாக இருக்கின்றன. இவை உப்புச் சுவையுடைய தேனையே சேகரிக்கின்றன. உப்புத் தேனைச் சேகரிக்கும் தேனீயிடம் பயமின்றி நெருங்கலாம் இந்தத் தேனீ யாரையும் கொட்டுவதில்லை.

க. ரவிசந்திரன் மட்டக்குளி,

---

எல்லாவற்றிற்கும் தாக்குப்பிடித்து எதிர்நீச்சல் போட்டு வாழலாம் என்ற மனோபாவம் ஏழாமல்... சே... இந்த அவஸ்தையான வாழ்க்கைவேண்டவே வேண்டாம் என்று வாழ்வதை என்னவென்பது? வாழ்க்கை என்றால் எல்லாந்தானிருக்கும் என்ற நினைப்பு இப்படியான அவஸ்தைகளுக்கு ஆட்படுகிறவர்களுக்கு ஏனோ வருவதில்லை. நினைத்தபடி வாழ முடியவில்லையே என்று நாளாந்தம் எண்ணுபவர்களின் எண்ணங்கள் ஈடேறுததால் வாழ்க்கை அவஸ்தைக்குரியதாய், வெறுப்புக்குரியதாய் ஆகிவிடுகிறது. அவர்களைப் போய் வாழத்தெரியாதவர் என்று சொல்லலாமா—?

புனிதாவிற்கும் அந்த வாழ்க்கை அப்படித்தானிருந்தது. பெண்களுக்கு அதிகம் பொறுமை வேண்டும் என்பது எதற்கு...? புனிதா நிறைய பொறுத்து விட்டாளோ என்னவோ...? இருந்தும் இந்தப் பிடிப்பில்லாத வாழ்க்கையிலும் ஏதோ ஓரிடத்தில் எதிர்பார்ப்பும், ஆசையும் அவளுக்கு இருக்கத்தான் செய்தது. அது அந்த பருவத்து ஆசையாக இருக்கவேண்டும். ஆனால் அவற்றிற்கு நிறைவு கிடைக்குமா? என்பது அவளளவில் கேள்விக்குறியான ஒன்று.

அன்று அவள் அலுவலகத்தில் அவசர அவசரமாய் தட்டச்சு இயந்திரத்தில் தாளம் போட்டுக் கொண்டிருந்தாள். அதை அடித்து வைத்துவிட்டு நாலரை மணி பஸ்ஸை பிடிக்க வேணும் என்ற எண்ணம் தான் அப்படி அவசரப்படுத்தியது.

அப்படி அவள் இருக்க .....

"மிஸ் புனிதா—! எக்ஸ்கியூஸ்.....! நான் அவசரமாய் வீட்டிக்குப் போக வேண்டும் இதைக்கொஞ்சம் "ரைப்" பண்ணி மனேஜர் பார்வைக்கு வைச்சிங்களெண்டால் நன்றியுடையவனாயிருப்பேன்" -அதே அலுவலகத்தில் வேலை செய்யும் கோபால் வேண்டிக் கொண்டான்.

மறுக்கவும் முடியாமல், செய்யவும் தோன்றாமல் சில நிமிடங்கள் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஏன்... சிரமமாக இருக்கிறதா.....?" — செஞ்சலோடு சிரித்தான்

"மிஸ்டர்...! கோபால்..! சிரமம் ஒன்றுமில்லை. நானும் அவசரமாய் வீட்டுக்குப் போகவேண்டும்" என்றாள் மெதுவாக.

"என்னை விடவா இன்று உங்களுக்கு வீட்டில் அவசர வேலை இருக்கிறது...?"

"அதெப்படி உங்களுக்கிருக்கு? அவசிய விடயத்தை சொல்லாமல் இப்பிடி பேசினால்..." — கேட்டாள்.

"உங்களுக்குச் சொன்னாலென்ன...? இன்று அக்காவை பெண்பார்க்க வருகிறார்கள். நான் அவர்கள் முன் நிற்க வேண்டும். அதனால்தான் ..."

"ஓ ! என்ற ஒரு கணத்தின் பின் அவள் தன் வாழ்த்தைத் தெரிவித்தபோது...

"அக்காவின் இத்திருமண விடயம் நிறைவு பெற்றால் தான் உங்கள் வாழ்த்தை ஏற்றுக்கொள்ள முடியும்."- அவன் சோகமாய் சிரித்தான்.

"ஏன் இதில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா...?"

"அப்பிடிச் சொல்ல முடியாது. எல்லாம் சீதனப் பிரச்சினைக்குள்தான் இருக்கிறது."

"இதுவும், சாதியும் நம் மத்தியில் ஒழிந்து போகாத ஒன்றாய்...... பெண்களை வாழ வொட்டாமல் செய்கிறது. இவையெல்லாம் நம் சமூகத்தை விட்டு என்றுதான் ஒழிந்து போகுமோ..... ஆனாலும் என்போன்ற பெண்கள் நிச்சயம் இவைக்கு பலிதான்"- சொல்லி பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

"உண்மைதான், அக்காவுக்கு எத்தனையோ இடங்களில் பேசியும் இதனால் குழப்பிப் போச்சு இப்ப அக்காவுக்கு முப்பத்திரண்டு வயது அவவுக்கு ஆனால்தான் என் பின்னே உள்ள மூன்று தங்கைகளுக்கும் வாழ்வு. எல்லாத்திற்கும் நான்தான் பொறுப்பு. எனக்கு எத்தகைய சுமை என்பதைப் பார்த்தீர்களா?"

அவன் தன் பொறுப்புக்களைச் சொல்லிவிட்டுப் போன பின்னால்...

'ஆண்பிள்ளையாக இருந்து தன்பொறுப்புக்களை எண்ணிக்

கலங்கும் கோபால்...... ஆனால் நான்... கோபாலைப் போன்ற ஒரு சகோதரன் எனக்கு இருந்திருக்க கூடாதா...? எல்லாமே வெறுமையான நிலையில் உணர்ச்சியற்ற ஜடம் மாதிரி இவர்களிடையே ஊடாடி, இயந்திரத்தோடு இயந்திரமாய் இயங்கி உழைத்து...... இப்பிடி எத்தினை காலத்துக்குத்தான் வாழ்வது...

வாழ்க்கையின் அவசியம், அவசியமில்லாதவையை புரிந்து கொள்ளாத பெற்றோர்கள், மனவளர்ச்சியடையாத சகோதரிகள், நிறைவேறாத ஆசையை வளர்த்துக் கொண்டிருக்கும் நான்... இப்படியிருக்கையில்...... வாழும் வயதில் பிள்ளைகள் இருக்கிறார்களே என்றில்லாமல் பெற்றோர்களின் சகிக்க முடியாத சல்லாபங்கள், அதன் பின்னால் ஏற்படும் அவதிகள் எல்லாம் என் தலையில் சுமையாக...... விடுபட முடியாத இந்த ஓட்டு வாழ்க்கை......" — அவள்தான் வீட்டுக்கு போக வேண்டும் என்பதை மறந்தவளாய் அவசரமில்லாமல் வேலை முடித்துக் கொண்டெழுந்தாள். நெற்றியிலும், கழுத்திலும் அரும்பியிருந்த வியர்வையை துடைத்துவிட்டுக் கொண்டு அமைதியாய் பஸ் நிலையத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

கோபாலின் அக்காவை இப்போ பெண்பார்க்க வந்திருப்பார்கள். அது நல்ல முடிவாக இருக்கவேண்டும் என பிரார்த்தித்துக் கொண்டாள்.

அவள் வீட்டிற்கு வந்தபோது அங்கு நிசப்தமாக காணப்பட்டது.

அடுக்களையிலிருந்து புகை வெளிவந்து கொண்டிருந்தது. தாய் ஒரு மூலையில் சுருண்டு படுத்திருந்தாள். அந்த அமைதியைக் கலைத்தவளாய்........

"அம்மா......! என்னணை இந்தநேரம் படுத்திருக்கிறாய்...?" — கேட்டாள்

"ம்..." என்று முனகி விட்டு பதில் சொல்லவோ, மகளைத் திரும்பிப் பார்க்கவோ கூசியவளாய் படுத்திருந்தாள்.

அவளுக்கு எதுவோ புரிபடுகிறமாதிரி இருந்தது. சே ! என்று மனங்கசந்தவளாய் அடுக்களைத்திண்ணையில் அமர்ந்து கொண்டாள்.

அடுக்களையில் பச்சை விறகுகளுடன் பாமா போராடிக் கொண்டிருந்தாள். அதை பார்த்தபடி தன் மனப்புகைச்சலை அடக்கத் தெம்பில்லாதவளாய் நாடிக்கு கைகளை முட்டுக் கொடுத்தபடி இருந்தாள்.

## சூரிய மின்சாரம் !

பாலைவனங்களில் கூட இனிமேல் டெலிபோன் வந்து விடும் போலிருக்கிறது. மைல் கணக்கில் தொலைபேசி கம்பி இணைப்புகள் தேவையில்லை. சூரிய ஒளியில் இருந்து தயாரிக்கப்பட்ட மின்சாரம் பாட்டரிகளில் சேமித்து வைக்கப்படுகிறது. இதற்கென விசேஷ முறையில் டெலிபோன் பெட்டியை தொழில்நுட்ப வல்லுனர்கள் தயாரித்து இருக்கிறார்கள்.

**சிவமணி மாணிக்கவாசகர்**
**காரை நகர்**

"அக்கா...! இந்தா தேத்தண்ணி..." பாமா கொடுக்க அவள் அதை வாங்காமல் அவளையே விழி கொட்டாமல் பார்த்தாள்.

"ஓ...! பாமா ரஞ்சி, ராணி இவர்கள்தான் எவ்வளவு வளர்ந்து விட்டார்கள் மனந்தான்...?"

"அக்கா...! வந்தநேரம் தொட்டு ஏன் இப்பிடி இருக்கிறாய் ?" — பாமா அடுக்களையில் இருந்தபடி கேட்டாள்.

"எப்ப பொழுது படும் என்டு பார்த்துக்கொண்டிருக்கிறன். எங்களுக்குத்தானே விடிவில்லை..." விரக்தியின் மேலீட்டால் சொன்னாள்.

"என்னக்கா...! ஏதோவெல்லாம் பேசிறாய். எனக்கொண்டும் புரியேல்லை..."

"உனக்கொண்டும் புரியாததிற்கு நான் என்ன செய்ய ? புரிய வைச்சாலும் புரிஞ்சு கொள்ளாத நீங்கள் காலம் முழுதும் இப்பிடியே எந்த விமோசனத்துக்கும் ஆளாகாமல் இருங்கோ. ஐயாவும் அம்மாவும் பிள்ளையை மட்டும் பெத்து......" — முழந்தாழ்களினிடையே முகத்தை புதைத்து விம்மினாள்.

அந்நேரம் தவறணைப் பிளாவில் வாங்கி மூக்கு முட்ட ஊற்றிவிட்டு நிலை கொள்ளாத வெறியோடு தள்ளாடிக் கொண்டு வந்தார் தந்தை.

"இந்தக் குடும்பம் கிடக்கிற கிடையில் இதுவும் ஒண்டுதான் இல்லாத குறை இப்பிடிக் குடிச்சு குட்டிச் சுவரானதுதான் மிச்சமெண்டால்..." இதுவரை மௌனமாக நடமாடியவள் பொறுதவளாய் சொன்னாள். இனியும் அவர்கள் கூத்தடிப்பதைப்பார்த்துக்கொண்டிருக்க விரும்பினாளில்லை.

"ஆரடி...! அவள் என்னைத் திருத்த வெளிக்கிட்டவள்." வெறியில் திண்ணைக்கப்பைக் கட்டிப்பிடித்துக்கொண்டார்.

"அக்கா..! ஒண்டும் சொல்லாதை ஐயாவைப் பாக்கபயமாய்கிடக்கு. அம்மாவுக்கும் ஏலாது" — தங்கைகள் கெஞ்சினார்கள்.

"சும்மா இருங்கோடி. அம்மாவாம் அம்மா...... விலஸ்த்தை கெட்ட ஜென்மங்கள். இவர்களைப் போலயா எல்லாரும் இருக்கிறார்கள்...? இவையள் தங்களுக்குள்ள கட்டுப்பாடில்லாமல் நிலை தடுமாறி போனால் அதாலை பாதிக்கப்படுறது நாங்கள் தானே ...?" ஆத்திரமாய் சொன்னாள்.

"எடியே.....! என்னடி......
...கை கணக்ககளைத் திறவன்"
...ரத்துக் கத்தினார் தந்தை.

அக்கம் பக்கத்தார்கள் விடுப்புப் பார்க்க வேலிப் பொட்டு வழியே தலையைத் திணித்துக் கொண்டார்கள். தங்கள் வீட்டு போராட்டங்களை மறந்து அடுத்த வீட்டுச் சண்டையைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டினார்கள். இந்தக் கீழ்த்தரமான செயலும் நம் சமூகத்தவரிடயே மலிந்து போய்விட்ட ஒன்று.

"உழைக்கிறன் எண்ட திமிரில அவளின்ர பேச்சைப் பார்.....அவளுக்கெல்லாம்....." வாயால் சொல்லக்கூசும் வார்த்தைகளை வெறியில் அவர் கொட்டியபோது ஆத்திரத்தால் கொதித்தெழுந்தாள் புனிதா.

ஆயினும் அக்கம் பக்கத்துத் தலைகள் காரணமாய் பல்லைக் கடித்துக்கொண்டு......

"சீ......! இவரும் ஒரு தகப்பனே.......? குடும்பத்தைக் கொண்டு நடத்த திறனில்லை அறிவிழந்து நடந்து கொண்டு ......... இருக்கிற எங்களுக்கு மேன்மேலும் துன்பத்தை தந்து கொண்டு போதாமை இப்பிடியுமா.........? இந்த அவலம் நிறைஞ்ச வாழ்க்கை அவசியந்தானே........? என்னமும் இதுக்குள்ள கிடந்து அவதிப்பட வேணுமா?" உள்ளூர எண்ணி அழுதாள்.

இவ்வளவிற்கும் அவளின் தாய் சூடு, சொரணை அற்றவளாய் அசையாமல் படுத்திருந்தாள். தந்தையின் வசைமாரியும் நிற்கவில்லை.

அவளால் தாழ முடியாமல் போய்விட்டது. அன்பிற்கும், ஆறுதலுக்கும், அரவணைப்பிற்கும் ஆளில்லாதபோது அவளின் எதிர்பார்ப்புக்கள், ஆசைகள் அஸ்தமித்து போய் விட்ட மாதிரி தெரிந்தது.

அன்று இரவு அவள் சாப்பிடவில்லை. அன்றை இரவு தூக்கமில்லாத நீண்ட இரவாக இருந்தது அவளுக்கு. கூரைப் பொட்டின் வழியே நிலாவின் ஒளிக்கீற்று அவள் கண்களைக் கூடச் செய்தது. நாளை இரவு இதே ஒளிக்கீற்று.... கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு சட்டென்று எழுந்தாள்.

தன் வெறுப்பிற்கு ஆளாகிவிட்ட பெற்றோர், அனுதாபத்திற்குரிய சகோதரிகள், அலுவலகத்தில் வேலை செய்பவர்கள்......சில நிமிடங்களில் அவர்களையெல்லாம் மனக்கண்ணில் பார்த்து தன் முடிவையும் விடிவையும் நோக்கித் தொடர்ந்தாள். உறுதியான முடிவு அது. படுக்கையிலிருந்து எழுந்து ஒரு நிமிடம் தம் அக்கம் பக்கத்தில் படுத்திருந்தவர்களைப் பார்த்தாள். ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு வெளியே நடந்தாள். நிர்மலமான வானில் அந்த எழில் நிலா சுதந்திரமாய் மேற்கு நோக்கி நகர்ந்து செல்வதைக் கண்டாள். எங்கோ தொலைவில் நாயொன்று ஊளையிடுவதையும் கேட்டாள்.

மறுநாள் பொழுது விடிந்தபோது ஆசைகள், அவலங்கள் அடங்கிப்போன அவள் உடல் கோடி வேப்ப மரத்தில் அநாதையாகத் தொங்கியது. ஊர்கூடி ஒப்பாரி மட்டுமல்ல அவளை உணராமல் உவமைகளோடு கதைக்கவும் செய்தார்கள்.

(யாவும் கற்பனை)

## உங்களுக்கு தெரியுமா?

உலகப் புகழ்பெற்ற ஜேர்மன் இசையமைப்பாளர் ஜோனிஸ் பிராஹாம்ஸ் தன் முதல் இசையை அமைக்க 20 வருடங்கள் எடுத்தாராம். அதன் பிறகு அவர் இசையமைத்த மெட்டுக்கள் யாவும் ஒரு சில தினங்களில் நிறைவேறி முடிந்தனவாம்...?

★ ஐரோப்பாக் கண்டத்தில் வாழும் கிரிமோ இன கழுகுகள் 9 அடி நீளமுடையனவாம் ஆனால் அவற்றின் முட்டைகள் மட்டும் 5 அங்குலம் நீளம் இருக்குமாம்?

★ மாஸ்கோவின் கிரெம்ளின் மாளிகையில் 176 இனத்தைச் சேர்ந்தவர்கள் வேலை செய்கிறார்களாம். இவர்கள் 200 வித்தியாசமான மொழிகளில் உரையாடுவார்களாம்

தகவல் :
தமிழ்நாதன், செட்டிகுளம்



அக்கா: பூனை எலியைப் பிடித்து தின்றது. இது என்ன காலம்?

தங்கை: சற்று பொறு...

அக்கா: என்ன யோசிக்கிறாய்?

தங்கை: எலியின் கஷ்ட காலமா? அல்லது கெட்ட காலமா? என்று தான்...

அக்கா: ?...... ........

புவக்பிட்டிய, சதாசிவம்.




## சிவமலர் செல்வத்துரை

பெண் எழுத்தாளர்; நுண்ணிய சிந்தனை சமூகத்தினை ஊடுருவும் ஆழ்ந்த பார்வை, சொல்வதைப் பிறர் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய மொழி, நடை என்பனவற்றைக் கொண்டுதான் இலக்கியத்துக்குப் போதிய பங்களிப்பைத் தருகிறார்கள் என்பது மறுக்கமுடியாத...... ஏன் மறைக்கப்பட முடியாத உண்மை!- எனக் கூறிக் கொள்ளும் சிவமலர் செல்வத்துரை கடந்த பதினேழு ஆண்டுகளாக இலக்கியத் துறையில் ஈடுபட்டு வருகிறார்!

கவிதை, கட்டுரை, நாடகம், நகைச்சுவை, உரைச்சித்திரம் என இலக்கியத்தின் சகல வடிவங்களிலும் படைப்பளித்த செல்வி சிவமலர் 1967ல் "ஒளி" சிறுசஞ்சிகையில் பிரசுரமான "அவள் திரும்பி வரும் வரைக்கும்" என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமாகி இதுவரை ஈழத்து பத்திரிகை வாஞெலிக்கென 75 ற்கும் மேற்பட்ட கதைகளை எழுதியுள்ளார்!

ஆரம்ப காலங்களிலேயே அடுத்தடுத்து தன் படைப்புகளுக்கு பரிசில்களைத் தட்டிக் கொண்ட சிவமலர். "என் முக்கிய ரசிகர் என் தந்தையார்! அவருக்கு என் ஆக்கங்களில் பிடித்தது; எனது இலட்சியம் என்ற தலைப்பில் ஆரத்தியில் நான் வாசித்த கட்டுரை மட்டும் தான்" எனப் புன்னகையுடன் கூறிக் கொள்கிறார்.

## ஈழநாடு

யாழ்ப்பாணம் தளிர்கட்கு களம் தந்து உற்சாகப்படுத்திய ஈழநாடு வாரமலர் தொடர்ந்தும் வெளிவராதிருப்பது பெரிதும் மனம் வருத்தத்திற்குரியது! சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு வழி வகுத்தால் எழுதக் களம் இன்றி தவிக்கும் இளம் தளிர்கட்கு அது வரப்பிரசாதமாகும்!

## வட கோவை

1975 ஆவணி சுடரில் பிரசுரமான "சூனியம்" சிறுகதை மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமான வடகோவை வரதராஜன் சிறுகதைத் துறையில் மட்டுமன்றி மரபுக் கவிபுனைவதிலும் இளந்தலை முறையினருள் முன்னணியில் உள்ளவர். நிலவு குளிர்ச்சியாக இல்லை, வெளிறிகள், நாளைவரும் இருநாள், அன்னதானம் போன்ற இவரது சிறுகதைகள் பரிசுக்கதைகளாக பலராலும் பாராட்டுப் பெற்றவை. வட கோவையின் கவிகளைப்பற்றி 'மறுமலர்ச்சி' வரதர் குறிப்பிட்டபோது மகாகவி, முருகையன், சில்லையூர் ஆகியோருடன் ஒப்பிட்டிருந்தார்.

## மட்டுநகரில் 'சுடர்' ஆய்வரங்கு

மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம் 'சுடர்' ஆய்வரங்கை, அண்மையில் மட்டு நகர் நூல் நிலைய மண்டபத்தில் நடத்தியது. இந்த ஆய்வரங்கை, நடத்த முன் வந்த திரு. ரீ. பாக்கியநாயகம் திரு. அன்புமணி ஆகியோர் பெரும் பாராட்டுக்குரியவர்கள். தொடர்ந்தும் இவ்விதம் ஈழத்து சஞ்சிகைகளின் ஆய்வரங்கை மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்தி மட்டக்களப்பின் இலக்கிய விழிப்புணர்ச்சிக்கு உந்து சக்தியாக இருக்க வேண்டும் என்பது இலக்கியச் சோலையின் அவாவாகும்.

இந்த ஆய்வரங்கின் தலைவர் ரீ. பாக்கியநாயகம் பேசுகையில் உதயதாரகை, மறுமலர்ச்சி, ஈழகேசரி, மலர் போன்ற சஞ்சிகைகளின் இலக்கியப்பணி பற்றிக்குறிப்பிட்டார்.

திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) பேசுகையில் அலை, தீர்த்தக்கரை போன்ற சஞ்சிகைகள் பற்றி குறிப்பிட்டுவிட்டு, சுடர் துணிச்சலான விடயங்களை பிரசுரித்து தேவையான பணியாற்றுவதாகவும் சுடரில் வெளிவரும் 'காலபலன்' பகுதி பாராட்டுக்குரியது என்றும் குறிப்பிட்டார்.

சுடர் ஆசிரியர் அரி, கவிஞர் செ. குணரத்தினம், தங்கன் ஆகியோரும் பேசினர்.

மட்டக்களப்பு எழுத்தாளர்கள் பலரை ஒருங்கு சேரவைத்து இலக்கிய கருத்துப் பரிமாறல்களை நடத்த துணைபுரிந்த மேற்படி எழுத்தாளர் சங்கத்துக்கு சுடரின் சார்பில் நன்றி கூறுகிறோம்.

(ஆசிரியர்.)

# பாரதியார் கண்டதும் காண விரும்பியதும்

— "புத்தொளி" —

"தமிழர்களாகிய நமக்குள்ளே ஆண்மை போய்விட்டது. நமக்குத் தேசம் கிடையாது, சுயாதீனம் கிடையாது, இந்த நிலைமையில் 'ஸரஸ்வதி' இந்நாட்டிலே வந்து அவதரிப்பாளா?"

இப்படியாக நம்மைப் பழித்து, நம் தமிழ் இனத்தைச் சபித்து எழுதின ஒருவருக்கு இன்று நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிறோம். பழித்தவரைப் பாராட்டும் செயல் வியப்பாகத் தோன்றலாம். உண்மை தெரியாதவர்களுக்குத்தான் வியப்புத் தோன்றும். இப்படி ஏன் பழித்தார் பாரதியார் என்று ஆராய்வின்றி எண்ணுபவர்களுக்கு இது வியப்பாகத்தானிருக்கும். கட்டுரைத் தொடக்கத்திலே உள்ள வாக்கியங்கள் தமிழினத்திடம் பாரதியார் கொண்ட ஆராக் காதலில் விளைந்தவை; தமிழன் நலம் கருதியவை.

பாரதியார் தமிழினம் முன்னே இருந்த நிலையைக் கற்றுணர்ந்தார். அந்த இனத்தின் நிகழ்கால நிலையை கண்டு கவன்றார். இனி எதிர்காலத்தில் அந்த இனம் எவ்வாறு இருக்க வேண்டுமென்பது பற்றிக் கனவு கண்டார். கண்டு உணர்ந்த நிலைக்கும் கற்றுணர்ந்த நிலைக்கும் இடையே நிலவிய வேற்றுமைத் தரம் மலையும் மடுவுமாக இருந்ததைக் கண்டார். மதலையின் நலம் கருதிய தாயின் ஆராமை பாரதியாரின் சொலலிலே இடம் கொண்டது. பழிப்புரை எழுதிப் பண்பைக் கெடுக்கும் பாதகம் பாரதியாருக்குத் தெரியாது.

"இப்போது திருஷ்டாந்தமாகத் தமிழ் நாட்டை எடுத்துக் கொள்வோம். இங்கே கம்பனைப் போன்ற கவிஞர்கள் இக்காலத்தில் யார் இருக்கிறார்கள்? இங்ஙனமாக உண்மையான கவிதை இந்நாட்டிலே போய்விட்டது. இது போலவே மற்ற மதுரக் கலைகளும் மழுங்கிப் போய்விட்டன."

கட்டுரையின் ஆரம்பத்தில் எழுதிய வாக்கியங்கள் பாரதியார் எழுதிய ஒரு கட்டுரையின் முடிவுரை. மேலேயுள்ள கருத்துக்கள் அதே கட்டுரையில் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள கலைப்பஞ்சத்தை விளக்குவன. இதனைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கம்பனைப் போன்ற, கவிஞர்கள் இக்காலத்தில் யார் இருக்கிறார்கள் என்று கேள்வி ஒன்றை எழுப்புகிறார் பாரதியார். அவனைப்போல் ஒரு பெருங்கவி நிகழ் காலத்தில் இல்லை என்ற ஒரு கருத்தை மட்டுமா இந்த வினா தெரிவிக்கிறது? இல்லை.

"கல்வி சிறந்த தமிழ் நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு."

என்று மகிழ்ச்சியுடன் கூத்தாடுவதற்கு என்ன புகழ் படைத்தது தமிழ் நாடு. அந்தப் புகழ் கொண்ட இனம் இன்று வளம் சுருங்கிக் கிடக்கிறதே என்ற இரு சிந்தனைகளை எழுப்புகிறது பாரதியாரின் வினா.

காலன் தமிழனையை ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சியிருந்தான். ஆனால் இன்று, அந்த நெஞ்சுரத்தோடு நாம் வாழ முடியுமா? முன்னைப் புலவோர் காவியம் செய்து கொடுத்தார். சாத்திரங்கள் பல தந்தார். தாரணி எங்கும் புகழ்ந்திட வாழ்ந்தோம். ஆனால் இன்று.....?

**இன்றொரு சொல்லினைக் கேட்டேன் — இனி**
**ஏது செய்வேன் எனதாருயிர் மக்காள்**
**கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்குக்**
**கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்.**

என்று புலம்புகிறாள் பாரதி கண்ட தமிழன்னை. கொன்றிடல் போலொரு வார்த்தையை ஒருவன் கூறிவிட்டானும்.

அவன் சொன்ன வார்த்தைதான் என்ன?

மெல்லத் தமிழ் இனிச் சாகும் — அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்.

இதுதான் கொன்றிடல் போலொரு வார்த்தை. மேற்குத்திசை மொழிகள் ஓங்குவதிலே எமக்குத் தடை கிடையாது. ஆனால், தம் மொழியைப் பற்றிய அவச்சொல் ஏன் இப்படிப் பிறக்க வேண்டும்?

புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே.

சரி, வளரட்டும் என்று சொல்லி விடலாம். ஆனால், அந்த வளர்ச்சி எம்மிடத்தில் இல்லையே!

— அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

இதுவரை இல்லாவிட்டால் என்ன? அவற்றைத் தமிழிலே ஆக்கமுடியாதா?

**சொல்லவும் கூடுவதில்லை — அவை**
**சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை**

என்று பிறக்கிறது வசை மொழி. தமிழின் வரலாற்றை, ஆற்றலை, ஆழத்தை உணராதவன் இப்படிக் கூறுகிறான். தம் தொல்காப்பியருக்குத் தெரியாதது வெள்ளைக்காரனுக்குத் தெரிந்து விட்டது. இராமாயணத்திலே இருக்கிற புட்பக விமானத்தைத்தானே

இன்று 'ஏரோப்பிளேன்' ஆக்கிவிட்டான் என்று பெருமையடித்துச் சும்மாகிடந்தால் நாடு வாழாது. இனம் வாழாது. பழங்கதைகளைச் சொல்வதிலே மகிமை இல்லை.

"தமிழ் நாட்டில் உண்மையான கல்வி பரவவேண்டுமானால் சகல சாஸ்திரங்களும் தமிழ் பாஷை மூலமாகவே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையை தமக்குள்ளே அறிவுடையோரெல்லாரும் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதனை அனுசரணைக்குக் கொண்டு வருவதற்குத் தக்கபடி தமக்குள்ளே சக்தி பிறக்கவில்லை என்று எழுதுகிறார் பாரதியார். அந்தச் சக்தி — தமிழிலே எல்லாவற்றையும் கற்பிக்கின்ற சக்தி நம்மிலே பிறப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு, நாமமது பெயரளவில் தமிழர் என வாழ்கிறோம். இது சரியாகாது. ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கிறோம் ஆயினும் சேம முறவாழவேண்டுமெனவே விரும்புகின்றோம். அதற்கு என்னவழி? தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

இலக்கியங்களைப் படைப்பதும் படிப்பதும் தேவைதான். தமக்குத் தொழில் கவிதை என்று தம் குறிக்கோளைப் புலப்படுத்திய பாரதியார் இலக்கியத்தைப் புறக்கணித்து விட முடியாது. ஆனால் இன்றைய நிலையில் தமிழின் உடனடியான தேவை தமிழினத்தின் கல்வியின் மூலாதாரமான பின்னணி அறிவியலாகவே இருக்க வேண்டும்.

**சென்றிடுவீர் எட்டுத்திக்கும் — கலைச்**
**செல்வங்கள் யாவும்**
**கொணர்ந்திங்குச் சேர்ப்பீர் எனவும்**
**பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.**

எனவும் பாரதியார் அறுதியிட்டுக் குறிப்பிடுகிறார்.

"இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமலிருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்று மங்கியிருந்ததையும் நான் அறிவேன். ஆனால், போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்" இவ்வாறு தமிழனிடம் தாம் கொண்ட நம்பிக்கையை வெளியிடுகிறார் பாரதியார்.

★ ★ ★

## உங்களுக்குத் தெரியுமா?

O சவூதி அரேபியாவில் பெண்கள் கார் ஓட்ட முடியாது. கார் நிற்பாட்டும் இடம் தவிர வேறு இடங்களில் நிற்பாட்டினால் சொந்தக்காரருக்குச் சொல்லாமலே பொலிஸார் காரை ஸ்டேஷனுக்கு எடுத்துக் கொண்டு சென்று விடுவார்கள். சொந்தக்காரர் அங்கு சென்று குற்றப் பணம் கட்டி விட்டு காரை மீட்டு வரவேண்டும்.

O வாகனங்களினால் யாரையாவது மோதி விட்டால்... வாகனச் சொந்தக்காரரின் பக்கம் பிழை இல்லாவிட்டாலும் கூட... காயங்களுக்கு ஏற்ப குற்றப் பணம் மோதப்பட்டவருக்கு செலுத்தப்படல் வேண்டும். உயிரைப் பறித்துக் கொண்டால் 1 இலட்சத்துக்கு மேல்...

O பன்னிரண்டு, பதினைந்து வயதுக்குட்பட்ட சவூதி இளைஞர்களுக்கு மோட்டார் சைக்கிள் என்றால் வெறி. ஆசையில் கண் மண் தெரியாமல் ஓடுவார்கள் "லைசன்ஸ்' இல்லாமல் இருந்தும் கூட.

O சவூதி அரேபியாவில் காண இயலாத அரிய வாகனங்களில் 'சைக்கிள்' ஒன்றென்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் உண்மை, இங்குள்ளவர்களுக்கு கார் சைக்கிள் மாதிரி. நம்மவர்களின் கார் இவர்களுக்கு சைக்கிள் மாதிரி சைக்கிள்மேல் உள்ள அத்தனை ஆசையில்...ஜெட்டாவில் ஒரு மைதான மேடமைத்து அதன் மேல் பல மடங்கு பெரிய சைக்கிள் மாதிரி உருவொன்றையமைத்து பார்வைக்கு விட்டிருக்கிறார்கள்.

O கார் தவிர்ந்த லொறி 'பிக் அப்' வான் போன்றவைகளில் பூக்கள்... கட்டங்கள் என்பவற்றை அடுக்கடுக்காகத் தீட்டி வர்ணம் பூசி அழகு படுத்தி இருப்பார்கள். சில லொறிகளில் கலர் பல்ப்ஸும் குஞ்சங்கள் நிற மணிகள் காகிதங்கள் கூடத் தொங்கும். தம்மை... தம்மைச் சார்ந்த பொருட்களைத் தம் நாட்டை அழகு படுத்துவதில் மிக ஆர்வமாக இருக்கிறார்கள்.

— **அருண் விஜயராணி.** ஜெட்டா
சவூதி அரேபியா,

# கவிச்சரங்கள்

## "திறந்தது மனக் கதவு"

— கமலினி முத்துலிங்கம் —

வேலை யில்லாத் திண்டாட்டம்
வீண் வம்போ ஏராளம்,
காலை முதல் மாலை வரை
கால் கடுக்க நடக்கின்றோம்;
படித்து முடித்து விட்டோம்
பரீட்சை எடுத்து விட்டோம்,
சிங்காரக் கனவுகளை - நெஞ்சிலும்
வளர்த்து விட்டோம்!

வைத்தியர் எஞ்சினியர்,
பட்டதாரி வாத்தியார்;
பட்டியலில் நாமில்லை; பட்டப்
படிப்போ எமக்கில்லை;
"நாடு முன்னேறும்"
நான் வந்தால் என்று சொன்னார்,
இன்று வந்து விட்டார்
வந்து என்ன செய்தார்!

நாட்டின் முது கெலும்பு
'நாங்களே' என்றுரைத்தார்,
நாமும் வேலை கேட்டால்
'இன்றில்லை' நாளை என்பார்;
நேரில் பார்ப்பதற்கோ - அதி
காலையில் சென்றிடு வோம்,
மாலை வந்தாலும் - எங்கள்
மந்திரி வர மாட்டார்!

## எண்ணெயில் எரிகின்ற நெருப்பு

— ரீ. எஸ். சிவகுமார் —

எங்கள் இலட்சியத்திற்கு
இப்போது ஏழு வயது!
நாங்கள் —
எரிதழல் இதயங்களை வைத்திருப்பவர்கள்
எங்கள் உடமைகள்
எரிக்கப்படும் போதெல்லாம்
இதயம்தான் கொழுந்து விடுகிறது!
இலங்கை எரியுண்டது முன்னொருகால்,
இலக்கியம் படித்ததில்லையா?
கவலைப்படாதீர்கள்!
என்றாவது ஒரு நாள் - அதைப்
பார்க்கப் போகிறீர்கள்!
அதுவரை —
உங்கள் 'கவனிப்புகள்'
எங்கள் இதயங்களுக்கு
எண்ணெய் ஊற்றட்டும்!
மொழி, எங்களுக்கு வெறும்
ஊடகம் மாத்திரமல்ல;
உயிரும் அதுதான்!
தமிழே! உன்னை என்னால்
கன்னியாகக் காணமுடியவில்லை;
கயிறாகத்தான் தென்படுகிறாய்!
இளைத்திருப்பதைச் சொல்லவில்லை
எம்மை நீ-

## அச்சம்

—செக்கடிப்புலவு நாகராஜா—

"பாவமெனும் சாக்கடையில்
நித்தமும் மூழ்கி
அங்கிருக்கும் புழுப்போல
அநித்திய வாழ்வில் துடித்து
அங்கிருக்கும் அழுக்குகள் போல
சொந்த பந்த பிணைப்புப் பெற்று
இழிந்த வாழ்வு
அடைந்த மனிதா
நீ ஏன் நரகம் செல்ல
அஞ்சுகிறாய்"

## மனமுண்டோ?

— எம். எஸ். வென்தா —

"மனம் நொந்த வேளையிலும்
மனம் திறந்து கடர் படித்தேன்
தினம் உந்தன் தேன் தமிழை
தேடாத மனமும் உண்டோ"

## எது குத்தியது!

— ஐ. மு. தனபாலசிங்கம் —

தொட்டால் சுருங்கி
சுகம் தந்தே!
கொட்டிக் கொடுத்தான்
தீர்ந்த பின்னால்;
எட்டிக் கடந்தேன் - அப்போ
தட்டிக் கேட்டான்
குத்தியது என்னை!

தொட்டால் சுருங்கி

மறுநாள் சென்றிடுவோம்; அவர்
மனையாள் வந்திடுவார்.
காசை வாங்கிடுவார்; பின்
காலம் கடத்திடுவார்;
காலம் நகர்கின்றது, எங்கள்
காசும் கரைகின்றது,
வேலை கிடைக்கவில்லை - நாம்
வீணே நடக்கின்றோம்!

நடந்து களைத்து விட்டோம்,
நாமும் உணர்ந்து கொண்டோம்
எங்கள் வாழ்க்கைக்கு
'ஏர்' தானே முதுகெலும்பு;
ஏர் பிடித்து வாழ்ந்திட்டால்
கார் கூட வாங்கிடலாம்,
கை கட்டி நிற்காமல் - நம்
உழைப்பாலே சுகம் பெறலாம்!

'இல்லை' என்று இருந்துவிட்டோம் - வீணே
காலந்தனை கடத்திவிட்டோம்,
'இல்லை' என்று எதுவுமில்லை - எங்கள்
ஈழ (வள) நாட்டினிலே;
இன்றிதைப் புரிந்து கொண்டோம்; மனக்
கதவுகளைத் திறந்து கொண்டோம்,
எங்கள் நலம் காண
இயல்பாக உழைத்திடுவோம்!

## "நெஞ்சமெலாம் நீயே"

— ரஜனிப்ரியா —

"எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்த
உன்னை ஏனோ கண்டேன்.
என்னை மறந்து, எண்ணம் இழந்து
என்னை நானே தந்தேன்.

நெஞ்சில் நிறைந்து, நெகிழ வைத்து
மயக்கம் நீயே தந்தாய்,
நித்தம் எனக்கே சொந்தமாக - உனை
நினைத்து வாடுகின்றேன்."

எம்மை உயந்த இடத்தில்
தூக்கி வைத்தது நீதான், இப்போது —
எங்கள் உடன் பிறந்தாரை
தூக்க நினைப்பதும் நீதான், ஆமாம் —
அந்தத் தைரியம் மற்றவர்க் கேது?
அழித்தலுக்கும் தூண்டி விட்டு,
புதுக்குதற்கும் உதவி செய்து......
ம்...... நடக்கட்டும்......
எரிமலையின் எழுச்சியை
நீருற்றியா நிறுத்திவிட முடியும்?

## என்னை மறந்துவிடு....

— மண்டைதீவு கலைச்செல்வி —

பாடியே நீ யெனை அழைக்கிறாய்,,
நானோ இங்கு செவிடாகிவிட்டேன்...
தேடியெனை அலைகின்றாய்,, திக்குத்தெரியாக்காட்டில்...
நான் கட்டுண்டு கிடக்கின்றேன்.
பேச நீயோ துடிக்கின்றாய்... புரிந்தாலும்,
நான் ஊமையாகி விட்டேன்.
கண்ணீர் விட்டுக் கதறுகின்றாய்!
நானோ கண்களையே இழந்து......
அக்கரையில் நின்று விதியே என
விரிட்டு அழுகின்றாய்...
அதையே நானும் இக்கரையில் முனகுகிறேன்.
போய்விட்ட காலங்கள் புரையோடிய புண்கள் தான்.
உறவுக் கலப்பினிலே பிரிவை பிரசவித்தோம்.
இனி நீயும் எனைப்போல்,, உயிரோடு ஜடமாகி......
என்னை மறந்து விடு என்னுயிரே.

பணமுள்ளால் குத்தும்;
என
தெரிந்த பின்னே;!
கொட்டிக் கொடுத்தேன்
குத்தியது என்னை,
அவள் நிலையல்ல
பணம்!

## சுமைகள்

— எஸ். கே. ராஜரெத்தினம் —

வாக்குகளைச்
சுமந்து திரியும்
வாக்காளர்க் கழுதைகள்
நாங்கள். தேர்தல்
காலங்களிலோ
எங்களைத் தேடிவந்து
சுமப்பார்கள்
அரசியல் வாதிகள்!
தேவைகள் முடிந்தபின்போ
மீண்டும் எங்கள் முதுகில்
புதிய சுமைகள்
ஏற்றப்பட்டு,
ஏமாற்றப்பட்டு
இலகு காத்த கிளிகளாய்
உலவி வருவோம்
ஊமையாய்

## அனுதாபம்

— க. நவரத்தினம் —

சம்பள மெடுத்து
தனிவழி சென்ற - என்னைத்
தடுத்து நிறுத்திப் - பணத்
தைத்
தட்டிப் பறித்த - திருடன்
கேட்டான் - எப்படியப்பா
இந்தப் பணத்தில் - குடும்பம்
நடத்து கின்றாய்?

# கலையரசு குறித்த சில நினைவுகள்

— பொ. சண்முகநாதன் —

ஈழத்தின் நாடகத் தந்தை கலையரசு க. சொர்ணலிங்கம் அவர்கள் மறைந்து விட்டார். ஆனால் அவரது நினைவுகள் மறக்கக்கூடியனவல்ல. அவரோடு அவ்வப்போது பழகிய — அவரைச் சில விழாக்களுக்கு அழைத்து மகிழ்ந்த அனுபவங்கள் எனக்கும் உண்டு. அந்த அனுபவங்கள் வாயிலாக எனது இதயத்தைத் தொட்ட - இதயத்தை விட்டகலாத சில இனிய நினைவுகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏனையோர் அவரைப் பற்றிச் சொல்லிய-எழுதிவருகின்ற குறிப்புகளிலிருந்து இவைசற்று மாறுபட்டன. இருப்பினும் அவரது உயர்ந்த தூய உள்ளத்தை புரிந்து கொள்ள இவை உங்களுக்கு உதவும் என்பது எனது நம்பிக்கை

## நேரத்தை மதிக்கும் நேர்த்தி

ஒரு விழா ஆறு மணிக்குத் தொடங்குவதாக இருந்தால் ஏழு மணிக்குமேல் போவதுதான் அழகு — அதாவது பெரிய மனிதர்களுக்கு அழகு என்பது இப்போதெல்லாம் வழக்கமாகி விட்டது. ஆனால் கலையரசு என்ற பெரிய மனிதரோ அவ்விழாவுக்கு ஐந்து மணிக்கு முன்னதாகவே வந்து விடுவார். பல சமயங்களில் கலையரசு அப்படி வந்திருக்கும் வேளைகளில் மண்டபத்தில் அந்த விழா ஏற்பாட்டாளர்களே வந்திருக்க மாட்டார்கள்.

சில சமயங்களில் அவர் நகைச்சுவையாக தாம் எதிர்கொண்ட அத்தகைய அனுபவங்களை எமக்குச் சொல்லியிருக்கிறார். தாம் நாடகங்களுக்குத் தலைமை தாங்கவென்று சென்ற சில இடங்களில், தாம் அங்கு சென்ற பின்னர்தானும் மேடை அமைக்கப்பட்டு சீன்கள் கட்டப்பட்டு ஒலிபெருக்கிகள் பொருத்தப்படுவதுண்டாம். அதையெல்லாம் அவர் அமைதியாக இருந்து பார்த்துக் கொண்டிருப்பாராம்.

இப்படியெல்லாம் அவர் முன்மாதிரியாக நடந்துகாட்டியும் நாம் திருந்தியபாடில்லை. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்டபடி நிகழ்ச்சிகளைத் தொடங்கும் பழக்கம் இன்னமும்தான் நமக்குக் கைவரவில்லை. இருப்பினும் கலையரசர் இந்த வழக்கம் திருந்தும்வரை காத்திருக்கவில்லை. இறுதிவரை உறுதியாக இப்பழக்கத்தைக் கடைப்பிடித்துவந்தார்.

எனக்குத் தெரிந்தவரை, ஒரு முறை மட்டும் நகரமண்டபத்தில் நடைபெற்ற எனது நூல் வெளியீட்டு விழாவுக்கு அவர் குறிப்பிட்ட நேரத்தைத் தாண்டியும் வரமுடியாமற் போய் விட்டது. எல்லாருக்குமே ஆச்சரியமும் அதிர்ச்சியும். குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னரே வரவேண்டியவர் தாமதித்தும் வரவில்லை என்றால்...? ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்க வேண்டும் என்று எல்லாருமே கவலையுடன் காத்திருந்தோம்.

கடைசியாக அவரும் வந்துவிட்டார். பரபரப்புடன் காரிலிருந்து இறங்கி வேகமாக மேடைக்கு வருகிறார். எல்லாரிடமும் தாம் தாமதமாக வந்ததற்கு பாவனையாலேயே மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறார். மேடையில் இருந்தவர்களிடம் தம் மனைவிக்கு அன்று மாலை ஏற்பட்ட சிறு விபத்தைப் பற்றிக்கூறி அதனால்தான் அத்தாமதம் என்பதை விளக்குகிறார். போதாக்குறைக்கு எனக்கொரு கடிதம் அதிலே, எல்லாம் விளக்கப்பட்டு, மன்னிப்பும் கோரியிருந்தார்.

இவ்வளவும் எதற்காக? விழாக்களுக்குத் தாமதமாக வருவதென்பது மற்றவர்களைப் பொறுத்தவரை ஒரு சாதாரண சங்கதி. இதற்குப்போய் இந்த மனிதர் எதற்காக இவ்வளவு அவதிப்படவேண்டும்? ஆம், அவரைப் பொறுத்தவரை ‘அது’ மாபெரும் தவறாகப் பட்டு, அவரை மிக்க மனவேதனை உறச்செய்திருக்கிறது.

## வாழ்த்தத் தெரிந்த வாய்

கலையரசு மேடைக்கு வந்துவிட்டார் எனவைத்துக்கொள்வோம். அவர் பெரியவர், பழுத்த அனுபவசாலி. குற்றம் குறைகளை எடுத்துச் சொல்லும் தகுதியும் உரிமையும் பெற்றவர். போதனை செய்வதும் குறைகளைக் கண்டிப்பதும் தானே அறிவாளிகளுக்கு அழகு என்று கருதப்படுகிறது. ஆனாலும் கலையரசர் இவைகளைப் பற்றியெல்லாம் மூச்சுக்காட்ட மாட்டார்.

அவரை விழாவுக்கு அழைத்து காக்க வைத்து அவரது பொறுமையைச் சோதித்தவர்கள் பயந்திருப்பார்கள். அவர் பேசும்போது அதற்காகத் தங்களைக் கண்டிக்கப் போகிறார் என்று! ஆனால் கலையரசரோ அப்படி ஒரு குறை நடந்ததையே மறந்து பேசுவார்.

கலையரசு என்ற அந்தப் பெரிய கலைஞருக்குப் பிடிக்கும் வண்ணம் அவர் பாராட்டும்படி நாடகம் போடுவதென்பது முடியாத காரியம். இருந்தாலும் அவர் தலைமை வகிக்கவென்று வத்துவிட்டால் எந்த மோசமான

நாடகமாயிருந்தாலும், அதிலுள்ள ஏதாவது ஒரு நல்ல அம்சத்தைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டியே பேசுவார்.

இருந்தாலும். அவர் அவருக்கே உரித்தான தமது உண்மையான விமர்சனத்தை - கண்டனத்தை — ஆலோசனைகளையெல்லாம் தமது இல்லத்துக்கு வரும் கலைஞர்களிடம் சதா வற்புறுத்திக்கொண்டுதான் இருப்பார்.

எத்தனையோ சிரமங்கள் தொல்லைகளுக்கு மத்தியிலே தாம் விழாக்களை நடத்துகிறோம் - கலைஞர்கள் மேடையேறுகிறார்கள். இவைகளை எல்லாம் நன்குணர்ந்து, என்ன இருந்தாலும் அதனைப் பாராட்டவேண்டும் - அவர்களை ஊக்குவிக்கவேண்டும் - வளரும் பயிரை முளையிலேயே கிள்ளி விடுவதுபோன்று நடந்து கொள்ளக் கூடாது - கண்டனங்களை பகிரங்கமாக பலர் முன்னிலையில் செய்யக் கூடாது என்பன கலையரசுவின் கொள்கை போலும்!

இந்த இரண்டு பண்புகளும் கலையரசுக்கே யுரிய - அவரை அணி செய்த சிறப்பியல்புகள்.

## கலையரசுவின் இலக்கிய நெஞ்சம்

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களை ஒரு நாடகக் கலைஞர் என்று சொல்லுமளவுக்கு இலக்கியவாதி என்று சொல்லமுடியாது தான். ஆனாலும் அவர் ஒரு சிறந்த இலக்கியச் சுவைஞர் என்பதை மறந்துவிடலாகாது. அவர் சில இலக்கிய விழாக்கள் நூல் வெளியீட்டு விழாக்களிற் கலந்துகொண்டு வியக்கத்தக்க கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்.

நான்கூட எனது மூன்று நூல் வெளியீட்டு விழாக்களுக்கு அவரை அழைத்து மகிழ்ந்தவன். அவரும் அத்தகைய சந்தர்ப்பங்களில் வேறு யாரும் வெளியிடாத புதுமையான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அத்தகைய கருத்துக்களில் இன்னும் எனது மனதில் நிற்கும் — மனதைவிட்டகலாத இரண்டு கருத்துக்களை மட்டும் இங்கே தருகிறேன்.

எனது 'கொழும்புப் பெண்' வெளியீட்டு விழாவில் பேசியவர்களிற் பலரும் — அது ஒரு நகைச்சுவை நூல் — அதிலே பேசுவதும் நகைச்சுவையாக இருக்கவேண்டும் என்ற நினைப்பில், கொழும்புப் பெண்களைப் பற்றி அப்படி எழுதியதற்காக நான் கொழும்புப் பெண்களின் பகையைச் சம்பாதிக்க வேண்டியிருக்கும் எனக் குறிப்பிட்டார்கள்.

கலையரசு மட்டும் சளைத்தவரா என்ன? அவர். அவர்களுக்குப் பதில் கூறுவதுபோல அக்கருத்தை மறுத்துத் தாமும் நகைச்சுவையாக இவ்வாறு கூறினார்.

"இங்கு பேசியவர்கள் எல்லாரும் சண்முகநாதன் கொழும்புப் பெண்களால் வெறுக்கப்படுவார் என்ற கருத்தைச் சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், இல்லை, அவர்கள் தங்களைப் பற்றி அப்படி எழுதியதற்காக சண்முகநாதனை வாழ்த்தவும் பாராட்டவும் போகிறார்கள். ஏனென்றால் அவர்கள் கால் யார் துணியில் சட்டை தைத்துப் போடுவதும் — வயிறு தெரியச் சேலை கட்டுவதும் — நகங்களுக்கும் உதடுகளுக்கும் மை பூசுவதும் — எல்லாம் எதற்காக? மற்றவர்கள் — அதிலும் சிறப்பாக ஆண்கள் தங்களைப் பார்த்து ரசிப்பதற்காகத்தானே? அப்படி இருக்கும்போது தங்களை மிகவும் நுட்பமாகக் கவனித்துப் புஸ்தகம் எழுதிய சண்முகநாதனையே அவர்கள் மிகவும் விரும்புவார்கள்"

'பெண்ணே நீ, பெரியவள்தான்' என்ற எனது நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதியிலுள்ள 'பிழைப்புக்குச் சில வழிகள்' என்ற கட்டுரை கலையரசுக்கு மிகவும் பிடித்த கட்டுரைகளுள் ஒன்று. அக்கட்டுரையில் வருகின்ற இலக்கியத் தொண்டன், நூல் வெளியிடும் எழுத்தாளர்களை அணுகித் தேனொழுகப் பேசி நூல்களை விற்பனைசெய்து தருவதாக வாக்களித்து நூல்களைப் பெற்றுச்செல்வார். கடைசியில் எழுத்தாளன் பாடு அதோ கதிதான்.

அந்த வெளியீட்டு விழாவில் பேசிய கலையரசு அவர்கள், இது வெறும் நகைச்சுவைக்காக எழுதப்பட்ட கட்டுரை அல்லவென்றும் எழுத்தாளன் உண்மையில் அப்படியும் பாதிக்கப்படுகிறான் என்பதையே நகைச்சுவையாக ஆசிரியர் இப்படிக் குறிப்பிடுகிறார் என்றும் கவலையோடு கூறினார்.

அவருக்கு அக்கட்டுரை அவ்வளவு தூரம் பிடித்ததற்கான காரணம் பின்னர் அவரோடு அவரது இல்லத்தில் உரையாடியபோதுதான் எனக்குப் புரிந்தது. தமக்கும் அத்தகைய அனுபவங்கள் ஏற்பட்டிருப்பதாகவும், தம்முடைய 'நாடகமும் நானும்' நூல்களை விற்பனை செய்து உதவுவதாக வாக்களித்து அவைகளைப் பெற்றுச் சென்ற பல புள்ளிகள் பின்னர் அதைப்பற்றிய கதைக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்ட விவரங்களை வேதனையுடன் வெளியிட்டார்.

கலையரசருக்கு விழாக்கள் நினைவு மண்டபங்கள் எல்லாம் வேண்டியதுதான். அதற்கு முன்னர் இப்படியாக அவரிடம் கடன் பட்டவர்கள் அதனைத் தீர்க்கவேண்டாமா?

இப்படியாக எத்தனையோ நினைவுகள். ஆனால் அந்த நினைவுக்குரியவர்தாம் நம்மிடையே இல்லையே! எல்லாரும் சொல்வது போல் சொல்வதாயிருந்தால் அவரது மறைவு எமக்கெல்லாம் ஈடுசெய்ய முடியாத இழப்புத்தான்.



**மனேஜர்:** நம்ம ஆபீசிலே எல்லாரும் நல்ல உற்சாகமாய் வேலே செய்வதற்கு ஒரு கண்டிஷன் போட வேணும்

**கிளார்க்:** அது என்ன கண்டிஷன்

**மனேஜர்:** ஏர் கண்டிஷன்

* * *

**ஒருவர்:** ரீகன் தன்னைச் சுட்டவரை திருப்பிச் சுடாதது ஆச்சரியம்தானே......?

**மற்றவர்:** அவரிடம்தான் துப்பாக்கி இல்லையே......?

**ஒருவர்:** ஏன் இல்லாமல் பெயரிலே ஒரு 'கன்' இருக்கே.

**எல். நாகராஜா** செக்கடிப்புலவு

★ ★ ★

**ஒருவர்:** இந்த திணைக்களத்தில வேல செய்யத் தொடங்கின பிறகு பெரிய சௌக்கியக் கேடு.

**மற்றவர்:** எங்க வேல செய்யிற......?

**ஒருவர்:** சௌக்கியத் திணைக்களத்தில்.

* * *

**பாடகர்:** என்னப்பா பேசிய பணத்தைவிட 50/- குறைச்சுத் தாறீங்களே!

**தலைவர்:** நீங்கள்தானே சார் கொஞ்ச நேரத்துக்கு முன்னுல........'பணம் என்னடா பணம்......பணம்...'' அப்பிடிஎன்டு படிச்சிங்க

**பாடகர்:** ......அ......ஆ.......!.........

**செல்வானந்தன்**

★ ★ ★

**தாய்:** இந்தாடா நீ குதிரை தானே கேட்டே! இந்தா, மரத்திலே பண்ணின குதிரை.

**மகன்:** ''போம்மா! எனக்கு நிஜக் குதிரை தான் வேணும் குதிரையிலே பண்ணின குதிரை!''

**தயாமதி முத்துலிங்கம்**

✦ ✦ ✦

உயர்திரு மனேஜர் அவர்கட்கு,

தாங்கள் எனக்குக் கொடுத்திருக்கும் நாற்காலியில் நான் உட்கார்ந்து வேலை செய்யும்போது எனது முதுகெலும்புகள் நாற்காலியைக் குத்தி விடுவதால் ரொம்ப வலி ஏற்படுகின்றது. ஆகையால் ஒரு டன்லப் பில்லோ வாங்கிப் போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * *

**நோயாளி:** நான் எப்பொழுதும் உங்ககிட்டே தான் டாக்டர் வரேன்......'

**டாக்டர்:** ''அப்படியா?

**நோயாளி:** இங்கே தான் கும்பலே இருக்கிறதில்லே அதனுல்தான்.

* * *

**ரஸிகர்:** கச்சேரியை முடிக்கவா போறீங்க இன்னும் இரண்டு மூன்று கீர்த்தனைகளும் தில்லானவையும் பாடுங்களேன் கேட்கலாம்

**பாகவதர்:** உங்களுக்கென்ன? பாதிக் கச்சேரியிலே போய் முதல் பந்தியிலே சாப்பிட்டு வந்திட்டீங்க. நாங்கள் இன்னும் சாப்பிடவே யில்லே. எங்களுக்கும் பசிக்காதா?

**வீரமணி**

✦ ✦ ✦

**பஸ் கண்டக்டர்:** புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. அபராதம் இருநூறு ரூபாய் ...... .. ஒட்டியிருக்கிறது தெரியவில்லையோ.....

**புகைப்பவர்:** ஆனுல்........ நான் இந்தப் பக்கம் ஒட்டியிருக்கும் சீஸேஹில் சிகரட் விளம்பரத்தை யல்லவா பார்த்துக்கொண்டிருக்கிறேன்........

* * *

**பஸ்சாரதி:** (பஸ்சை நிறுத்திவிட்டு வந்து) உங்கள் வீட்டிலிருந்து ஒரு பையன் என்மீது ஒரு கல்லை வீசினுன்........

**பரமசாமி:** அந்தக் கல் உங்கள் மீது பட்டதா......?

**பஸ்சாரதி:** இல்லை......

**பரமசாமி:** அப்ப..............அது என் மகனில்லை.

* * *

**பஸ்சாரதி:** பெட்ரோல் முடிந்துவிட்டது... இனி கொஞ்சமும் முன்னுல் செல்லாது.........

**ஒரு பயணி:** பின்னுல் விடு தம்பி......... வீட்டுக்குப் போக........

**எஸ். பீ. கே.**

✦ ✦ ✦

இ. கதிர்ராஜன்,
மே/பா செ. இராஜலிங்கம்,
பிரதான வீதி,
கிளிவெட்டி.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பூந்தோட்டம் அமைத்தல்.

சி. கணேசலிங்கம்,
மே/பா சிற்றம்பலம்
ஆழியவளை, தாளையடி.

பொழுதுபோக்கு: கிரிக்கட், கராத்தே பழகுதல்.

கு. பிறேமானந்,
45, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பொழுது போக்கு: யோகாசனம் செய்தல், சஞ்சிகை, பத்திரிகை வாசித்தல்

எம். இருபைநாதன்,
சந்தைப்படுத்தல் பகுதி
இல 512, ஸ்ரீசங்கராஜ
மாவத்த,
கொழும்பு - 10.

பொழுதுபோக்கு: பத்திரிகை சஞ்சிகை, சினிமா, என்பன.

கே. ஜெயா கந்தையா
மதவடி ஒழுங்கை
அளவெட்டி தெற்கு
அளவெட்டி.

பொழுதுபோக்கு: சிறுகதை, கட்டுரை, எழுதுதல், தையல், வானொலி கேட்டல்.

பி. எம். நிஹமட்,
என். எச். டி. ஏ. 13/1
லவ்லேன்,
உப்புவெளி,
திருகோணமலை.

பொழுதுபோக்கு: கராட்டி உடல்கல்லம்.

இ. வில்வராஜா,
புகையிரத பா. கா. சேவை,
புகையிரத நிலையம்,
மட்டக்களப்பு.

பொழுதுபோக்கு: தமிழ், விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஈழத்து சஞ்சிகைகளை விரும்பி வாசித்தல்

கா. ஸ்ரீகங்காதரன்
இல—15 கஸ்சிசன்றேட்
திருகோணமலை

பொழுது போக்கு: சுடர், பத்திரிகை, வாசித்தல்.

எம். பாக்கியநாத்
15. வெலிமடை வீதி,
பண்டாரவளை டிஸ்பென்சரி
பண்டாரவளை

பொழுதுபோக்கு: கதைப் புத்தகம் வாசித்தல், பேனா நண்பர், நண்பியர் தொடர்பு

ஆர். ஏ. அஞ்சலின்மேரி,
147/9 பாடசாலை வீதி,
சீனக்குடா.

பொழுது போக்கு: பேனா நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல், டி. வி. பார்த்தல்

## சுடர் நண்பர் வட்டம்

எம். லெனைட்,
32, பற்றிக்ஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், பாடுதல்,

தயாமதி முத்துலிங்கம்,
சரசாலை வடக்கு
சாவகச்சேரி.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், கதைப்புத்தகம் வாசித்தல்.

ஏ. எம். ஹனிபா,
61/B 7 மாவடி வீதி,
பெரியநீலாவணை,

பொழுதுபோக்கு: வானொலி, டி. வி. திரை.

நூ. மு. நிஜாம்,
836, பாலையூற்று வீதி
திருகோணமலை.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், கதைப் புத்தகம் வாசித்தல், ஓவியம் வரைதல்.

த. கனகரத்தினம்,
நொச்சிக்குளம்,
நெடுங்கேணி,

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், நண்பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல்.

சிவாகரன்
15 பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

பொழுது போக்கு: உடற் பயிற்சி செய்தல் சாதி சமய குறைபாடுகள் நீக்குதற்கு உதவிகள் செய்தல்

செல்வி க. கஸ்தூரி,
50, மெயின் வீதி,
பன்விலை.

பொழுதுபோக்கு: கதை, கட்டுரை வாசித்தல், வானொலி கேட்டல்.

சி. ஹரிகரன்
63/11 பரமானந்த விஹார
மாவத்த
கொழும்பு - 13.

பொழுதுபோக்கு: கதை, பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

என். அஸ்ரபா
836, பாலையூற்று,
திருகோணமலை.

பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், கட்டுரை, கவிதை, வானொலி.

கா. சத்தியகுமார்
14 B, U. C. குவாட்டர்ஸ்
மன்னார் வீதி
வவுனியா

பொழுதுபோக்கு: கட்டுரை, கவிதை எழுதுதல், உலகநாடுகளின் இயற்கை வளங்கள் பற்றியும் மனிதர்கள் பற்றியும் செய்திகளையும் புகைப்படங்களையும் சேகரித்தல்.

# ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள்

எஸ். அகஸ்தியர்

இபுருகீம் துறவி வேடம் பூண்ட அலி என்பவனை ஒருநாள் சந்திக்கிறான். அலியின் குரத்தனம் இபுருகீமை வியப்பிலாழ்த்துகின்றது. எனவே, இந்த அலியைக் கொண்டு அசன்பேயிடம் உள்ள சொத்தை அபகரிக்கச் சதித்திட்டம் போட்டு, அலியை அசன் வீட்டுக்கு அனுப்புகிறான். இதன்பொருட்டு அசன் சொல்லொண்ணாத் துயரங்களுக்காளாகின்றான்.

இந்தக் கட்டங்களில் நாவல் கதையோட்டம் உணர்ச்சிப்பிழம்பாகக் கனன்று விறுவிறுப்பாகச் செல்கின்றது.

அபகடம், வஞ்சகம், ஏமாற்று, சூது, சூட்சி போன்ற நாசகாரங்களைக் கையாண்டு சமூகத்தினைச் சூறையாடும் நச்சுப்பாம்புகள் மக்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டு, 'தர்மசீலர்' களாகவும், 'நற்போதகர்' களாகவும் வேஷமணிந்து அந்தப் போர்வையில், முன்னேறும் ஒரு சமுதாயத்தையே எப்படியெல்லாம் நாசமாக்கி வேடிக்கை பார்க்கிறார்கள் என்பதனை மிக நேர்த்தியாகக் காட்டியுள்ளார் ஆசிரியர். இதில் ஆசிரியரின் உயர்ந்த இலட்சியத்தையும் மானித இதயத்தையும் தரிசிக்கின்றோம். இதிற் பல எதிர்பாராத—திடீர்ச் சம்பவங்களால் நெஞ்சை உலுப்பிவிடும் சித்திரிப்புகளை, மரியம் என்னும் பெண்ணிடம் அசன் தஞ்சமடையும்வரை வெகு அற்புதமாக ஆசிரியர் ஆக்கியுள்ளார். இந்தக் கட்டங்களில் ஆசிரியரின் கைவண்ணம் மிக நேர்த்தியாக அமைந்துள்ளது.

அசனைக் கொலை செய்ய இபுருகீமினால் ஏவி விடப்பட்ட அலி கூட்டத்தினர் போடும் திட்டத்தைக் கட்டிலடியிற் பதுங்கியிருந்து அவதானித்துக் கதிகலங்கிய மரியம் மட்டுமன்றி, நாமும் உண்மையில் திகைத்து விடுகின்றோம். அந்தச் சதிக்கூட்டத்தின் கொலைத் திட்டமறிந்து நெஞ்சு பதறும் மரியத்தின் மனக்கோலத்தை இவ்வாறு ஆசிரியர் வர்ணிக்கிறார்.

'மரியமாகிய அரிவையின் செவிகளில் இக்கொடிய பாதகர்களின் சம்பாஷணை இடியைப்போல் விழவும், உள் நடுங்கி, 'ஐயோ, இப்பாவிகள் நம் சகோதரனாகிய அஸனைக் கொல்லத் துணிந்தார்களே, இஃதென்ன கொடுமை. ஒப்பற்ற அச் சிறுவன் இப்பாதகர்களுக்கு யாதொரு தீங்குஞ் செய்யவில்லையே? 'அகதிகளுக்கு அல்லாவே துணை' என்ற பழமொழிப்படி தயாபரனாகிலும் 'என் சகோதரனுக்குத் துணை செய்வானவென பலவாருக வியாகூலித்து இதற்கென்ன செய்யலாமென்று மெய் விதர்ப்புற்றிருந்தனன்'

மரியம் இப்படியாகப் பரதவித்த கோலத்தைச் சித்திரித்த தோரணையிலும் பார்க்க, இதில் ஆசிரியர் சித்திலெப்பை கையாண்ட மொழி நடையும், வாக்கிய அமைப்பும், எடுத்த பொருளை உணர்த்தும் திறனும் சாடிக்கேற்ற மூடிபோல் மிக லாவகமாக அமைந்துள்ளன. இதனை ஒரு கவிதைபோல் வடித்து உவமானமாக வாக்கியங்களை அர்த்த புஷ்டியுடன் ஆசிரியர் கொலுவிருத்தியமுறை நூற்றாண்டுக்குப் பின்னும் இன்றைய 'பிரபல தமிழ் நாவலாசிரியர்கள்' என்று பிரபலமாக்கப்பட்ட பெயர்பெற்ற எழுத்தாளர்களிடத்திலும் காணல் அரிது. இதனை இங்கே அழுத்திச் சொல்லத்தான் வேண்டியுள்ளது. 'இரவல் புடவையில் இது நல்ல கொய்யகம்' என்பதுபோல் தம்பி யோக்கியனாயினும் சால்வை இரவலான கற்றுக்குட்டிகள், சமுதாயப் பிரச்சினைகளைக் கொஞ்சங்கூடத் தெரியாமலே தெரிந்தவர்கள்போல் வேஷங்காட்டிக் கொள்கிற பாவத்துக்காகக் குப்பைகளைக் கரத்தைக் கணக்கில் எழுதிக் குவித்துவிட்டு—அதிகம் எழுதியும் எதையுமே சொல்லத் தெரியாத பச்சோந்திகள்—இடம் ஏவல் பொருள் கண்டு தங்களை மாற்றிக்கொள்ளும் கடைகெட்ட பலவீனத்தையே பெரும் பலமாகக் கற்பித்துப் பிதற்றுகின்றவர்கள்— நிச்சயம் நூறுவருஷங்களுக்கு முன் எழுதிய ஆசிரியர் சித்திலெப்பையின் நாவலைப் படித்தால், தங்கள் எழுதுகோலை விட்டு, தங்களுக்குக் கைவரப் பெற்ற திறவுகோலையே எடுத்தாள்வர் என்பதை என்னால் கூறமுடியும்.

ஆசிரியரின் கவிதையோட்டமான வாக்கியங்கள் நாவலில் இழையோடியிருக்கும் பாங்கினைப் பார்க்கும்போது, முன் குறிப்பிட்டதுபோல், காவியம் மருவி எழுந்த உரைகடை இலக்கியத்தைத் தரிசிக்கின்றோம்.

உதாரணத்திற்கு வகைக்கொன்று:
'அரிவையின் செவிகளில் இக்'கொடிய' பாதகர்களின் சம்பாஷணை 'இடியை'ப்போல் விழவும்......'

'தயாபரனாகிலும், என் சகோதரனுக்குத் துணைசெய்வானென' பலவாருக 'வியாகூலித்து', இதற்கென்ன செய்யலாமென்று மெய் 'விதிர்ப்புற்றி' ருந்தனன்.

இவ்வாக்கிய அமைப்புக்களில் வரும் 'கொடிய'; 'இடும்பை' 'வியாகூலித்து', 'விதிர்ப்புற்று' ஆகிய பதப்பிரயோகங்களை அர்த்த பாவத்துடன் புணர்த்தியதால் இதிலேயுள்ள காம்பீர்யத்தைக் கவனிக்கலாம்.

இவைபோக, மரியத்தின் அடுத்த கிருத்தியங்களை — அவள் உணர்ச்சிப் பிரவாகங்களை அவள் மனநிலையின் பிரக்ஞையுடன் இணைத்த விதம் அவற்றைவிட வென்று நிற்கின்றது.

அதனை ஆசிரியர் இப்படி விவரிக்கின்றார்:

'அஸனிருக்கும் அறைக்குள் நுழைந்து, அவனைக் கட்டித்தழுவி, கண்ணீராறாகப் பெருகிஓட, மிகுந்த துயரத்தால் வாய்பேசக் கூடாதவளாய்க் கதறி அழுதாள்......'

நுழைந்து கட்டித் தழுவும் அவள் கிரிகை, கண்ணீர் பெருகி ஓடும் துயர வெளிப்பாடு, வாய்பேசக்கூடாதவளாயுள்ள நிலைபேறு—இம் மூன்று குணவியல்புகளையும் ஒரு சிறு பந்திக்குள் — ஒரு பாத்திரத்தில் ஏற்றிவிட்ட விதம், பாத்திரத்துடன் வாசகனையும் ஒன்றிணைத்து விடுகின்றது. ஆசிரியரின் கைவண்ணம் இதில் பெருமை பெற்றிருக்கிறது.

மேலும் சில வித்தாரங்கள் இப்படியாக விரிவடைகின்றன. அவள் பதட்டம் இன்னதென அறியாத அசன் இவ்வாறு கேட்கின்றான்

'என் பிரியமுள்ள சகோதரியாகிய மரியமே. நீயேன் இப்படித் துக்கிக்கின்றாய். உனக்கு யாது குறை நேரிட்டது? என் அன்னையே உன்னை யாராகிலுஞ் சின்னமாய் ஏதாகிலுஞ் சொன்னார்களா? அவர்களின்னாரென எனக்குத் தெரிவி'

இதற்கு மரியம் சொல்கின்றாள்:

'ஐயோ என்னருமையான சகோதரனே... உனக்கு நேரிடிருக்கிற அபாயத்தைக் குறித்தல்லவோ நான் ஆருத்துயருற்றேன். ஆதலால் நீயிவ்வூரை விட்டோடியுயிர் பிழைத்துப்போவென்றாள்......'

'அம்மா, மரியமென்னும் மங்கையே, என்னாசைத் தங்கையே, எனக்கு நேரிட்ட தீங்கு யாது; நான் ஊரைவிட்டு ஓடிப்போவானேன். அதை விளங்கச் சொல்வாயென்று மீண்டும் கேட்டான்......'

அதற்கு மரியம் இப்படி அந்தகாரித்துப் பதறுகிறாள்:

'ஐயோ என்னன்பான சகோதரனே, அருமைத்துரை மகனே, நாங்கள் பட்ட துயர் தீர்த்த பண்புள்ள என் தம்பியே, வாடிச் சுருண்ட என்முகம் மலரவைத்த ஆதவனே, நாங்கள் சலித்து மனம் வருந்துகையில் தாங்கியவென் கண்மணியே......'

வாசாப்பு வசன நாடகங்களில் — நாட்டுக் கூத்துகளில் கதாபாத்திரங்கள் எழுந்து நின்று தமது நிலைபேறுகளை விருத்த வாசாப்பாக வெளிப்படுத்தும் பாணியாகவே மேற்கூறிய வாக்கியங்கள் அமைந்துள்ளன. இந்தப் பாணியை நாவலில் ஆசிரியர் சற்று அதிகமாகக் கையாண்டபோதும், அதனைக் கையாண்ட முறையால் கதை மாந்தர்களின் குணவியல்புகளுக்கு ஊறு விளைவிக்காமல் கதை அருவி போல் நகர்ந்து செல்வதை அவதானிக்கலாம்; அதில் ஆசிரியரின் அபாரத் திறமையும் வெளிப்படுகின்றது.

அலி, இபுறூகீம் ஆகிய இருவரின் சதித் திட்டங்களிலிருந்து அஸனைக் காப்பாற்றும் பொருட்டு, அஸன் மரியைப் பிரிய வேண்டியதாகிறது. அவனின் பிரிவுத்துயரை ஆசிரியர் வர்ணிக்கும்போது உண்மையில் ஒரு பெற்ற தாயிடமிருந்து பிரிகின்ற மைந்தனின் தாய்ப் பாசத்தையும், புத்திரசோகத்தையும் அனுபவிக்கின்றோம். துன்பவியல்வர்ணபாவம் சோகஸ்வரமாக ஆசிரியர் பேனாவில் இப்படி உயிர் பெற்றுவிடுகிறது.

ஒரு கவிதைபோல் ஊற்றுக்கண்ணெடுத்திருக்கும் இந்நாவல், அதன் கதைப் பின்னல்களில் சோடைகண்டு தெற்போட்டத்தூறல் மழையாகவிருப்பதையுங் காணலாம். கதைப் பின்னல் பிகுபண்ணியபோதும், மரியம் அஸன் பிரியும் கட்டத்திலிருந்து நாவல் 'களை' கட்டி நிற்கிறது.

மரியத்தைப் பிரிந்து சென்ற அஸன் கல்கத்தாவை அடைந்தபின் 'நான் யாரிடம் செல்வேன்' எனத்திக்கற்றவனாய் அந்தரித்துக் கொண்டு பட்டணத்தில் உள்ள போஜனசாலைகளில் பசியாறி, இரவுகளில் மஸ்ஜீதுகளில் உறங்கி இப்படியாக மூன்று நாட்கள் கழிகின்றன. இவ்வாறு அஸனிருக்க, ஓர் 'ஆங்கிலத் துரை'யின் மகன், அஸன் பக்கத்தில் இருந்து களைப்பாறிவிட்டு, தன் கையில் கொண்டுவந்த ஒரு புத்தகத்தை நழுவவிட்டுச் செல்கின்றான். புத்தகத்தை அஸன் எடுத்து அத்துரை மகனிடம் சேர்க்கிறான். துரைமகன் நன்றிக் கடனாகத் தனது ராஜஸ்தான் குடும்பத்துடன் அஸனை இணைத்துக்கொள்கின்றான். இத்துடன் அஸன் சம்பந்தப்பட்ட கதை நிறுத்தப்பட்டு வேறு பாத்திரங்களுடன் இணைந்து நகர்கின்றது.

நமது இன்றைய தமிழ் சினிமாவில் 'பண்ணப்படும்' செல்லரித்துப் போன குப்பைக் கதைகளின் ஓட்டத்தைக்கூடக் கொலை செய்துவிடுவதுபோல் யமதர்மராஜன் புறப்படுவதுபோல் 'சடா'ரென நிறுத்திவிட்டு வரும் டான்ஸ், அடிபுடி, பாட்டு அதுபோன்றே இந்நாவலின் கதையோட்ட மறுப்பு நிகழ்ச்சிகளும் நிரவிக்கிடக்கின்றன.

இப்படியாக நகரும் கதை, பின்பு அலி, மைமூன், பாத்திமா போன்ற பாத்திரங்களினூடாக அஸன் கதை விரிந்து ஆங்கிலத் துரை மகனின் ராஜஸ்தானத்திலுள்ள 'துரைசாணி'யை (பளிஞ) ஒரு சமயம் ஒரு காளையின் ஆபத்திலிருந்து அஸன் காப்பாற்றியதால் அத்துரைசாணி பளிஞவுடன் அஸன் நட்புண்டாகிறது.

(தொடரும்)

# சுடர் வாசகர் வட்டம்

✯ சுடரின் பணியை விரிவு படுத்தும் நோக்கத்துடன் நாம் அமைத்திருக்கும் வாசகர் வட்டத்தில் உறுப்பினர்களாக சேர விரும்புவோர் ஒரு வருட சந்தா (ரூ. 25.00) தொகையுடன் தங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

சந்தா தொகை அனுப்புவோர் தமது காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையில் **'நிர்வாகி சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்'** எனக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

— ஆசிரியர் —

இல.

191. **ஸ்ரீ எஸ். என். சுப்பிரமணியம்.**
சந்திராபானு அன் கோ
155, பிரதான வீதி
சங்கரன் கோவில்
தமிழ் நாடு.

192. **செல்வி இரத்தினபூபதி.**
யாழ். பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

193. **ஆர். திருநாவுக்கரசு.**
முத்தையன் கட்டு
ஒட்டி சுட்டான்.

194. **பி. ஜெயசிலன் பெர்னண்டோ.**
ஸ்டேசன் வீதி
பேசாலை
மன்னர்.

195. **சி. கணேசலிங்கம்.**
மே/பா சிற்றம்பலம்
ஆளியவளை
தாழையடி.

196. **ரி. எஸ். சிவகுமார்.**
உடுத்துறை தெற்கு
தாழையடி.

197. **எம். ஏ. மொஹமட் அனு வாஹித்**
பி. ஏ. (சிறப்பு)
தேசிய வீடமைப்பு திட்டம்
மாளிகாவத்தை
கொழும்பு - 10.

198. **டாக்டர் க. தம்பிஐயா R. M. P.**
கதிருஞெளி
தையிட்டி
காங்கேசன்துறை.

199. **க. கனகராஜா.**
மில்க் வைற் தொழிலகம்
த. பெ. எண் 77,
யாழ்ப்பாணம்.

200. **க. இராமலிங்கம்.**
இளைப்பாறிய தபாலதிபர்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

201. **திருமதி செ. மாலினி**
பூரண பவனம்
கண்டி வீதி,
சாவகச்சேரி

202. **என். ராம்குமாரன்.**
106, மில் கிறீன் வீதி,
வெலின் கார்டன் சிற்றி
ஹேர்ற்ஸ்
இங்கிலாந்து.

203. **தெ. ஸ்ரீரஞ்சன்.**
ராஜ வில்லா
வோட்டன் பிளேஸ்
தும்பளை
பருத்தித்துறை.

204. **செல்வி ஆர். சரஸ்வதி.**
மகளிர் கல்லூரி
சாவகச்சேரி.

205. **செ. புஷ்பானந்தன்.**
1ம் பிரிவு, மண்டூர்.

206. **செல்வி தம்பிஐயா.**
1ம் வட்டாரம்,
மண்டைதீவு.

207. **மண்டூர் மீனு.**
(ஆசிரியை)
மகாவித்தியாலயம்,
மண்டூர்.

208. **எம். நடராஜா.**
கருங்கண்டல் கிழக்கு,
முரளி ஸ்ரோர்
அடம்பன்.

209. **வி. கே. ரவிப்பிரியா.**
சுவீற் ஹேசஸ்
பெரிய கல்லாறு,
கல்லாறு.

210. **செல்வி பீ. சந்தியாபிள்ளை.**
10, புதுத்தெரு
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

## ஆனந்த திஸ்ஸ டி அல்விஸின் புழுகு மூட்டை

'சேர் ஜோன் கொத்தலாவலை காலத்தில் களனிக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட சிங்களம் மட்டுமே அரச கரும மொழி என்ற தீர்மானத்தையடுத்து நாட்டில் ஏற்பட்ட சிறுபான்மை பெரும்பான்மை என்ற பிரச்சினைகளை தீர்த்து மக்களை ஒன்றுபடுத்தியவர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனாவே' இவ்வாறு பொரளையில் (அண்மையில்) நடைபெற்ற ஐ. தே. க. கூட்டத்தில் அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

● தமிழ் மக்கள் பெரும் ஏமாளிகள் என்பதுதான் அமைச்சரின் எண்ணமோ? களனி மகாநாட்டில் மேற்படி 'சிங்களம் மட்டும் அரசகரும மொழி' என்ற பிரேரணையை முன் மொழிந்தவர் ஜே. ஆர். ஜயவர்தனாவே; அதை அறியாதவரா ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ்? அரசியல் வரலாறு இந்த கறை படிந்த காலகட்டத்தை என்றுமே மறந்து விடாது என்பதை அமைச்சர் நினைவில் கொள்ளவேண்டும்.

## தாரகை

தாரகை (செப்டம்பர் இதழ்) பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழ் கிடைக்கப் பெற்றோம்.

'பாரதி' யார்? என்பதை திருமதி ந. பாலேஸ்வரிபடம் பிடித்துக்காட்டியுள்ளார். கோகிலா மகேந்திரன், வேலணையூர் சு. கருணாநிதி ஆகியோர் பாரதிபற்றிய படைப்புக்களை தந்துள்ளனர். நீள்கரை நம்பி, அனுராதா பாக்கியநாதன் ஆகியோரின் சிறுகதைகளும் அமரகவி நீலாவணன், அ. கௌரிதாசன், ஈழக்குயில் இத்ரீஸ், கங்காதரம், ஸ்ரீதேவிப்பிரியா, நல்லை அமிழ்தன், தயாமதி முத்துலிங்கம், ஷந்திரிகா ஆகியோரின் மரபு — புதுக்கவிதைகளும் தாரகையை அலங்கரிக்கின்றன. முகவரி; ஆசிரியர், கண. மகேஸ்வரன், 214, பாத்திமாகிரி வீதி, மட்டக்களப்பு.

— ஆசிரியர் —

## விசேட டெலிபோன்

பாலைவனங்களில் கூட இனிமேல் டெலிபோன் வந்துவிடும் போலிருக்கிறது. மைல் கணக்கில் தொலைபேசிக் கம்பி இணைப்புகள் தேவையில்லை. சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப்பட்ட மின்சாரம் பாட்டரிகளில் சேமித்து வைக்கப்படுகிறது. இதற்கென விசேஷ முறையில் டெலிபோன் பெட்டியை தொழில் நுட்ப வல்லுனர்கள் தயாரித்து இருக்கின்றனர்.

எம். சிவபாதம்,
காரைநகர்.

## இருகை வல்லுனர்


அமெரிக்காவின் இருபதாவது ஜனாதிபதியான ஜேம்ஸ் கார்பீல்ட் தரமான எழுத்தாளர். அதிலும் ஒரே சமயத்தில் இரண்டு கைகளாலும் எழுத வல்லவர். ஒரே நேரத்தில் வலது கையினால் இலத்தீன் மொழியிலும் இடது கையினால் கிரேக்க மொழியிலும் பல கடிதங்கள் எழுதுவாராம். அமெரிக்காவின் முதல் இருகை வல்லுநர் ஜனாதிபதி இவர்தான்.

ப. கோவிந்தராஜன்
வட்டக்கச்சி

## மீன் தின்னும் வெளவால்

வெளவால் சாதாரணமாகப் பூச்சி புழுக்களையும் இயற்கை தரும் உணவுகளையும்தான் தின்னும். ஆனால் தென்அமெரிக்காவில் மோறுஸ்தீவில் ஒரு மீன் தின்னி வெளவால் இனம் இருக்கிறது. இந்த இனத்து வெள்வால் கடலில் பாய்ந்து மீன்களைப் பிடித்துத் தின்னுகிறது.

மா. சிவங்கம்
காரைநகர்.




அது பண்டிகைக்காலம் சலுசலாவிற்குள் சௌந்தர் நுழையும் போது கோழி கூவியது. லொறி முழுமையாக 'லோட்' பண்ணி முடிந்த போது...... பக்கத்தில் இருந்த மரங்களில் பறவைகள் தங்கிக் கொண்டிருந்தன.

சலுசலா வாசலிலும் தாமதம். பற்றுச் சீட்டோடு பரிசோதித்துப் பார்க்கும் காவலர்களுக்கும் களைப்புதான். அந்த தடையையும் தாண்டி லொறியை பிரதான வீதிக்கு எடுத்தான் சௌந்தர்.

பின் தட்டியை மூடி, இரும்புச் சட்டத்தைப் போட்டு, நன்றாகப் பூட்டிக் கொண்டான் கிளீனர். பூட்டுக்களை இழுத்துப் பார்த்தான் சௌந்தர். அவனுக்குத் திருப்தி. லொறியை கவனமாக இயக்கத் தொடங்கினான் சௌந்தர்.

கிளீனர் 'றைற்' சொல்லிவிட்டு, ஓடி வந்து ஒரே தாவலில் ஏறி, சௌந்தருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்.

இந்த வயதிலும் ஒரு இளைஞனுக்குரிய சுறு சுறுப்போடு இயங்கும் அந்த 'கிளீன'ருக்கும் வயது ஐம்பதுக்கு மேல். எருமைத் தயிரினாலும், பசுப் பாலினாலும் பதனிடப்பட்ட பலம் வாய்ந்த உடற்கட்டு.

அந்த உடற்கட்டுக்கு மூன்று குழந்தைகள்தான். சௌந்தருக்கு சாதாரண உடம்புதான். கிளீனரை விட ஐந்து வயது வித்தியாசம்.

சௌந்தருக்கு ஆறு குழந்தைகள். ஐந்து பெண். ஒன்றே ஒன்று ஆண். அதனால்தானோ என்னவோ அவன் இன்னும் அரசின் நன்கொடைக்கு ஆசைப்பட்டு, அறுவைச் சிகிச்சையும் செய்துகொள்ளவில்லை.

வீட்டுக்கு ஒரு ஆளை தன் இனப் பணிகளுக்கு ஒவ்வொருவரும் அர்ப்பணிக்க வேண்டும் என்பதில் ஆசை கொண்டவன் சௌந்தர். தன் இறுதிக் கடமைகளைச் செய்து முடிக்கவும் ஒரு ஆண் அவசியம் என்பது அவன் அடிமனதில் இருக்கின்றது. அதனால் அவன் இன்னும் ஒன்றை எதிர்பார்க்கின்றான்.

வாய் புளித்தது சௌந்தருக்கு. வாகன நெரிசலான வீதி, சிகரெட் புகைக்கவும் வாய்ப்பில்லை. லொறியை அவதானமாகச் செலுத்திக் கொண்டிருந்தான் சௌந்தர்.

குருநாகலில் இராப்போசனத்தை எடுத்தார்கள். நள்ளிரவு நல்ல குளிர். உண்ட மயக்கம் உறக்கத்தை நாடியது. அந்த உறக்கத்தை விரட்ட. வேகமாக சிகரெட்டைச் சிறிது நேரம் சுவைத்தான் சௌந்தர்.

ஏற்றியிருந்த பெறுமதி மிக்க பொருட்களை பற்றிய அச்சம் சௌந்தருக்குள் ஒரு அவசரத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. லொறியை இயக்கத் தொடங்கினான்.

சங்கத்திற்குச் சொந்தமான பொருட்கள். சௌந்தரின் உறக்கம் கொள்ளையர்களுக்கு உற்சாகத்தை உருவாக்கி... உதவியும் செய்துவிடும் என்ற எண்ணம் சௌந்தருக்கு. உறக்கத்தைத் தவிர்த்துக்கொண்டான். ஊதித் தள்ளினான் சிகரெட்டை.

தூக்கத்தோடு லொறியைச் செலுத்திதுர்அதிர்ஷ்டவசமாக ஏதாவது விபத்தில் சிக்கினால். "ஏன் தூக்கத்தோடு லொறியைச் செலுத்தினீர் என்று துளைத்தெடுப்பது மட்டுமல்ல... பொருட்களைக் கையாடவோ இவ்வாறு விபத்தை ஏற்படுத்தினீர்" என்று கேட்டாலும் கேட்பார்கள்...

கொஞ்சம் தூங்கிய நேரத்தில் கொள்ளையே நடந்துவிட்டால் "கொள்ளைக்கு நீர் உடந்தை. கோடி ரூபா பொருட்களைக் கொண்டு வரும் போது நித்திரை கொள்ளலாமா?" - என்றும் நச்சரிப்பார்கள்.

நேரத்தோடு சங்கத்திற்குப் போய் விட்டால் "வட்டாப்" பணத்திலும் கொஞ்சம் பிடித்து விடுவார்கள். அளவுக்கு அதிகமாக தாமதித்து சென்றாலும் விளக்கம் கொடுக்க வேண்டும் தண்டனைப் பணமும் அறவிடுவார்கள்.

சங்கத்தில் சாரதியாகக் கடமை புரிவதில் உள்ள சங்கடங்களை நினைத்தபடி, நிதானமாக லொறியைச் செலுத்திக் கொண்டிருந்தான் சௌந்தர்.

"சுருட்டொன்று பத்தினால் நல்லா இருக்குமே..." கூறினான் சௌந்தர். சௌந்தருக்குச்

அட்டையில் ஒரு பரீட்சார்த்தம்!

**பட்டங்கள் ஆண்டோம் சட்டங்கள் செய்தோம்
பாரதி சொன்ன பெண்ணானோம்! — வரும்
நட்டத்தில் அழுதோம் லாபத்தில் சிரித்தோம்
நாய்கர் வாழ்வில் பங்கானோம்! — அவர்
முட்டிட மெலிந்தோம் முறைத்திட நலிந்தோம்
முன்நின் றெதிர்த்திடச் சட்டமெது? — எம்மை
தட்டியே கழித்தார் எட்டியே உதைத்தார்
தலைநூல் அறுந்திட்ட பட்டமிது!**

— இ. விக்னேஸ்வரன்.

சுருட்டு மணம் பிடிக்காது என்பது கிளீனருக்குத் தெரியும். அதனால் லொறி நிற்கும் இடங்களில் மட்டும் இறங்கி நின்று புகைப்பார் கிளீனர்.

“நமது சகிப்பு சிலருக்கு சந்தோஷத்தை அளிக்குமானால்... அந்த சந்தோஷத்திற்கும் சந்தர்ப்பமளிப்பதுதான் மனிதத்தன்மை” — என்று நினைப்பவன் சௌந்தர்.

கிளீனருக்கு ஒரு குழந்தையின் குதூகலம். கரிக்கோச்சி ஒன்று லொறிக்குள் இருந்து புறப்படத் தொடங்கி விட்டது.

ஹபறணையில் “பிளேன் ரீ” ஒன்றை நிரப்பி விட்டு, நீண்ட பயணத்தில், நியாயமான தூரத்தைக் கடந்து விட்ட நிறைவோடு லொறியை இயக்கிக் கொண்டிருந்தான் சௌந்தர்.

பொலனறுவையும் ஒருவாறு கடந்து விட்டது. வெலிக்கந்தை. பயம் தெளிந்த மனதோடு சுவையாக ஒரு “பிளேன் ரீ”. பயணம் தொடர்ந்தது.

அது ஒரு குடியேற்றப் பகுதி. அந்த நீண்டசாலையில் இரண்டொருவர் உலவுவது போல் இருந்தது. புலரும் பொழுது. அதே இடத்தில் அண்மையில்தான் ஒரு கொள்ளை கூட நடந்தது. சௌந்தருக்கு பதட்டமாகவும், பயமாகவும் இருந்தது.

“பார்த்துப்போவோம்...” என்றான் கிளீனர். இப்படியான இடங்களில் லொறியை நிறுத்தி வைப்பதும் ஆபத்து. “முருகனை” ... முன்னே செல்ல விட்டு ‘அக்லேசிற்றறை’ பலமாக அழுத்தினான் சௌந்தர். லொறி புதியதொரு ஓசையோடு முன்னேறிக் கொண்டிருந்தது.

கணப் பொழுதில் அந்த இடத்தை கடந்து விட வேண்டும் என்ற கவனம் சௌந்தருக்கு. நடு ரோட்டில் ஒரு உருவம். உன்னிப்பாக கவனித்தான் சௌந்தர். பெண் உருவம். ஒருவேளை பேயோ? பொழுது புலரும் நேரத்தில் பேயா? இருக்காது.

அப்படியென்றால் கொள்ளைக் கூட்டம் சாதுரியமாக பெண்ணை நிறுத்தி வைத்திருக்கின்றதோ?

சௌந்தரின் உள்ளத்துள் பலமான கேள்விகள். அவன் அதற்கான பதிலைக் கண்டு கொள்ளுமுன்...... அந்த உருவத்தை நெருங்கி விட்டது. லொறி. ‘ஹோர்ன்’ பண்ணியும் அவள் அசைவதாக இல்லை.

லொறியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அந்த உருவத்தின் மீது பட்டும் படாமலும் படாரென நிறுத்தினான் சௌந்தர்.

“ஐயா என் ஒரேயொரு குழந்தையைக்காப்பாத்துங்க” — கண்ணீர் மல்க மன்றாட்டமாக கேட்டாள் அவள்.

அங்கே குழந்தையைக் காணோம். சௌந்தருக்கு குழப்பமாக இருந்தது. அவள் சடுதியாக அந்த சாலையோரத்து பற்றையை நோக்கி நடந்தாள். பற்றையருகில் இருந்து முனகல் சத்தம்.

‘கிளீனர்’ நடுங்கிக்கொண்டிருந்தான். சௌந்தர் அந்த பற்றைப் பக்கத்தையே பதட்டத்தோடு பார்த்தபடியே இருந்தான். லொறியை விட்டு இறங்கப்பயம்.

சுமார் ஒன்பது வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருத்தியை தூக்கியபடி லொறி அருகே வந்தாள் அவள். சிறுமியின் உடல் முழுக்க இரத்தம். சௌந்தருக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது.

அந்த சிறுமியோ அழுவதற்கும் சக்தியற்றவளாக முனகிக் கொண்டிருந்தாள்.

“எங்களை ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுங்க ஐயா......” அவள் கெஞ்சுகிறாள். சௌந்தர் கிளீனரைப் பார்க்கின்றான். கிளீனர் லொறியை விட்டு இறங்கி விட்டான். அவள் அந்தச் சிறுமியோடு ஏறிக் கொண்டாள். கிளீனரும் ஏறிக் கொண்டான். லொறி புறப்பட்டது.

கிளீனரே அவளோடு பாசத்தோடும், பரிவோடும் குரல் கொடுத்தார். அவள் குளறியபடி பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அண்மையில் தான் அந்த குடியேற்றப்பகுதியில் குடி அமர்ந்தவளாம். கணவன் நல்ல உழைப்பாளியாம். ஒரேயொரு பிள்ளை என்பதால் அவர்களைக் குடும்பக் கஷ்டம் அவ்வளவாக பாதிக்கவில்லையாம்.

அதனால் அப்பகுதியிலேயே அவர்கள் கொஞ்சம் வசதி படைத்தவர்களாக இருந்தார்களாம். இது பக்கத்து சகோ

தீர கண்ணுக்குள் குத்திக்கொண்டிருந்ததாம். அவள் பக்கத்து குடும்பங்களுக்கெல்லாம் இயன்றவரை முழுமையாக உதவியும் இருக்காளாம்.

அன்று தனது கணவன் இரவிலும் வேலை செய்யப் புறப்பட்டு விட்டானும். அவளும் சிறுமியும் மட்டுமே அந்த சிறு வீட்டில் இருந்தார்களாம். அப்போது ஒரு கும்பல் அவர்கள் வீட்டை முற்றுகையிட்டதாம். அதில் அவள் பார்த்த முகங்களும், பழகிய முகங்களும் இருந்தனவாம்.

பூட்டியிருந்த கதவை உடைத்தார்களாம். சிறுமி அச்சத்தோடு அலறினாளாம். அந்த அரக்கன் கையில் இருந்த வாள் ஒன்று சிறுமியின் கழுத்தை தொட்டுச் சென்றதாம். இரத்தம் தெறிக்க மீண்டும் சிறுமி அபயக்குரல் கொடுத்தாளாம். அடுத்த வெட்டு சிறுமியின் காலில் விழுந்ததாம். அத்தோடு சிறுமியும் மயங்கி விழுந்தாளாம். அந்த அதிர்ச்சியால் தானும் மயங்கி விழுந்தாளாம்.

உணர்வு வந்து விழித்தபோது வீடு தீப்பற்ற ஆரம்பித்ததாம். வந்த கும்பல் வீட்டில் இருந்த உடைமைகளையெல்லாம் சுருட்டிக்கொண்டு ஓடியதாம்.

அப்போதுதான் தன்னைச் சூழ்ந்திருக்கும் ஆபத்தை உணர்ந்தாளாம் அவள். சிறுமியையும் தூக்கிக் கொண்டு இருளில் ஓடி - காடுகளின் ஊடாக இரவு முழுக்க அலைந்து - இந்த சாலை ஓரத்திற்கு இப்போதான் வந்தாளாம். அதுவரை அவளுக்கு எந்த உதவியும் பாதுகாப்பும் கிடைக்கவில்லையாம்.

அவளின் கண்ணீர்க் கதை சௌந்தரின் கண்களையும் கலங்க வைத்தது. அந்தச் சிறுமியில் தனது மூன்றாவது மகளின் சாயல் தெரிவதை உணர்ந்தான் சௌந்தர் அவனுக்கு உருக்கம் அதிகரித்தது. "பிள்ளையே பெறாத கல்நெஞ்சக்காரன் தான் இதை செய்திருக்க வேண்டும்......" கிளீனர் ஆத்திரத்துடன் கூறினார்.

சிறுமி உணர்விழந்து கொண்டிருந்தாள். அவள் உயிரை எப்படியோ காக்க வேண்டும் என்ற வைராக்கியம் சௌந்தருக்கு. தனது கட்டுப்பாட்டை மீறாத உச்ச வேகத்தில் லொறியை இயக்கிக் கொண்டிருந்தான் சௌந்தர். அந்த தாயோ கண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

கிளீனர் சிறுமியின் தலையைத் தனது மடியில் கிடத்தி அவளைப் பக்குவமாக பிடித்துக் கொண்டிருந்தார்.

## ஜெர்மனியில் சமஸ்கிருதம்

சமஸ்கிருதம் பாரதத்தின் ஆத்மபாஷை. இருப்பினும் அங்கு அப்பாஷைக்குரிய அந்தஸ்து கவனிக்கப்படாமலே இருக்கிறது.

ஆனால், ஜெர்மனியில் சமஸ்கிருதம் உயர்ந்த மொழியாகக் கௌரவிக்கப் படுகிறது. உதாரணம், ஜெர்மனியில் தூத்ஷெவல் என்ற ஒலிபரப்புச்சேவையில் மாதமிருமுறை சமஸ்கிருதத்தில் செய்திகளை ஒலிபரப்புகிறார்கள்.

— கதிர் மாணிக்கம்.

அப்போதான் பின்னால் லொறியை ஒரு கார் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை அவதானித்தான் சௌந்தர். கார் லொறியை நெருங்கிக் கொண்டிந்தது. 'சைற்' கேட்டு நச்சரித்தபடி கார் தொடர்ந்து கொண்டிருந்தது.

அந்த ஒடுக்கமான சாலையில் அந்த காருக்கு வழி விட்டுக் கொடுப்பதானால் அதில் ஒரு பத்து நிமிடங்களாவது விரயமாகிவிடும். ஒரு செக்கன் கூட விரீயமாகக் கூடாது என்பது சௌந்தரின் எண்ணம். அந்த சிறுமியின் உயிரைக் காக்கும் வரை எதற்கும் தயாராகவே இருந்தான் சௌந்தர்.

லொறி 'அம்பியூலன்ஸ்' போல் அசுர வேகத்தில் சென்று கொண்டிருந்தது. அதனோடு போட்டி போட்டு 'சைற்' கேட்டபடி காரும் தொடர்ந்து கொண்டிருந்தது.

ஓட்டமாவடிவரை இந்த ஓட்டம் தொடர்ந்தது. ஓட்டமாவடிப் பாலபுகையிரத 'கேற்று'க்கள் மூடப்பட்டிருந்தன. திடீரென 'விறேக்'கைப் போட்டு நிறுத்தினான் சௌந்தர். காரும் லொறியோடு முட்டியும் முட்டாமலும் பயங்கரச் சத்தத்தோடு நின்றது.

காரின் கதவு பலமான ஓசையோடு திறந்து கொண்டது. அதில் இருந்து ஒருவர் இறங்கி வந்தார். சௌந்தரைப் பார்த்து ஏதோ கோபமாகப் பேசினார் அவர். மொழி புரியாது சிரித்தான் சௌந்தர். அவருக்கு ஆத்திரம். சௌந்தரை கை நீட்டி அறைந்தே விட்டார். அதிர்ந்து விட்டான் சௌந்தர். அவனுக்கும் ஆத்திரமாகவே இருந்தது.

சிறுமியின் உயிரைப் பற்றிய எண்ணமே அவனுக்குள் ஓங்கி நின்றதால்...... அவனது தன்மான உணர்ச்சிகள் அடங்கிப்போயின. அறைந்தவர் போய் காரில் ஏறிக் கொண்டார். அடுத்து கார்ச் சாரதி வந்தார்

அவனும் அந்நிய மொழியில் அட்டகாசமாக செள்ந்தரைப் பார்த்து முழங்கினான். அடுத்து அந்த லொறியின் இலக்கத்தை குறித்துக் கொண்டு சென்று விட்டான்.

"மெயில் றெயின்" ஓட்டமாவடிப் பாலத்தைக் கடந்து கொண்டிருந்தது. பாலத்தின் கதவு திறபட லொறியை அசையவிட்டான் சௌந்தர்.

வாழைச்சேனை அரசினர் வைத்தியசாலையில் சிறுமியைச்

சேர்த்தான் சௌந்தர். ஐந்து நிமிடம் பிந்தியிருந்தால் சிறுமியின் உயிரைக் காப்பாற்றி இருக்கவே முடியாது என்று டாக்டர்கள் கூறியபோதுதான் சௌந்தருக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

சைற் கொடுக்காததிற்காக பட்ட அறையின் வேதனை கூட அகன்று விட்டது சௌந்தருக்கு. அந்த தாயின் கருணையான பார்வையைப் பரிசாகப் பெற்று பயணத்தைத் தொடர்ந்தான்.

'சலுசல' சாமான்களைச் சங்கத்தில் பாரம் கொடுத்து தனது தலைப்பாரத்தைகுறைத்துக் கொண்டாலும் அந்த சிறுமியின் பரிதாப முகம் அவன் நெஞ்சுக்குப் பாரமாகவே இருந்தது.

பயணக்களைப்பிலும் கவலை கொள்ளாதவனாக மறுபடியும் வாழைச்சேனை வைத்தியசாலைக்கு சிறுமியை பார்க்கச் சென்ற சௌந்தர் அவளை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றி விட்ட செய்தி கேட்டு பரிதவித்தான்.

மட்டக்களப்பு வைத்தியசாலைக்குச் சென்று அந்தச் சிறுமியைத் தேடிக் கண்டான் சௌந்தர். அவளுடைய வலது கால் பாதம் அகற்றப்பட்டிருந்தது. ஆஸ்பத்திரிஎன்று பாராமலேயே அலறிவிட்டான் அவன். அந்த தாய்க்கு ஆறுதல் சொல்லவேண்டிய சௌந்தரே தளர்ந்துவிட்டான்.

வீட்டுக்கு வந்த சௌந்தருக்கு மனைவியின் வழக்கமான உபசரணைகள் தலையிடியை கொடுத்தன. எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமே அவனுள் எதிரொலித்துக் கொண்டிருந்தது. ஆறு குழந்தைகளின் பாதுகாப்பு... எதிர்காலம் இரண்டும் — இருந்தாற்போல் அவனை — இருளடைந்த ஒரு கண்டத்திற்கு இட்டுச் செல்வது போல் இருந்தது.

சௌந்தரின் மனைவி, அவனுடைய அப்போதைய மன நிலையைப் புரிந்து கொள்ளவில்லை. எனினும் அவரிடம் அந்த சந்தோஷமான செய்தியை சொல்லிவிடத் துடித்தாள்.

"அடுத்த பயணத்தில எனக்கு 'கிறேப்ஸ்' வாங்கி வாங்கோ...." — குழந்தை போல் நாணத்தோடு அவள் கூறினாள்.

அதுகூட சௌந்தருக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. அவளுடைய தாம்பத்திய வாழ்க்கையில் இந்த 'கிறேப்ஸ்' ஆசை ஆறுதடவை வந்திருக்கின்றது. 'கிறேப்ஸ்' கொடுத்து எட்டாம் மாதம் சௌந்தர் கையில் ஒரு குழந்தை. இது தான் நடைமுறை

"இன்னுமொரு ஆண் குழந்தை" ஆசையின் ஆக்கபூர்வமான அத்திவாரம் ஆரம்பமாகிவிட்டது...''- என்று கணித்து உள்ளூர சௌந்தர் களிப்படைந்தாலும் அவனுக்குள் ஏதோ கவலை.

சௌந்தரின் மனைவியின் கெட்டித்தனத்தால் தான் குடும்பம் கௌரவமாக இருக்கின்றது. ஆறுபேரில் ... ஐந்து பெண்களும் தரமான கல்லூரிப் படிப்பை மேற்கொண்டிருக்கின்றார்கள். பட்டினி கிடந்தாயிலும் 'ரியூசன்' எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். மூன்று பெண்கள் பருவம் அடைந்தும் விட்டார்கள். அவர்களைப் பற்றி எந்தச் சந்திக்கும் கதைகள் வருவதில்லை.

சௌந்தரின் மனைவி குடும்பப் பொறுப்புக்கள் அனைத்திலும் தனது திறமையைப் பதிக்கவே செய்தாள். அதனால் சௌந்தருக்கு உழைப்பு பிரச்சனையைத் தவிர எதுவும் இல்லை.

சௌந்தரின் மனைவி சௌந்தருக்குச் சாப்பாட்டைப் போட்டபடியே இந்த

## விபுலானந்த இசைநடனக் கல்லூரியில் நாட்டுக்கூத்தும் இடம் பெற வேண்டும்

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கம் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருக்கு கீழ் வரும் வேண்டுகோள்களை விடுத்து கடிதம் எழுதியுள்ளது.

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா இசைநடனக் கல்லூரியில் தற்சமயம் நடனம் வாய்ப்பாட்டு, வாத்தியம் முதலிய பாடங்கள் நடைபெறுகின்றன. இவற்றுடன் கிழக்கிலங்கையின் பாரம்பறிய கலைச்செல்வமான நாட்டுக்கூத்தும் இடம்பெற ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கோருகிறோம்.

கிழக்கிலங்கையின் தனித்துவம் மிளிரும் நாட்டுக்கூத்துக் கலை, கால ஓட்டத்தில் நசித்து எதிர்காலத்தில் இல்லாமலே போய்விடும் ஆபத்தும் தோன்றியுள்ளது. அதற்குக் காரணம் முறையான பயிற்சி இன்மையே. தற்போதுள்ள பழம் பெரும் நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் மறைவதற்கு முன்பே நாம் இக்கலையைக் காப்பாற்றியாக வேண்டும்' அதற்கு உகந்த ஒரே வழி இசை நடனக் கல்லூரியில் இக்கலையை ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளுவதுதான்.

இரா. நாகலிங்கம் செயலாளர்

## ஒருபத்திரிகையில் வெளிவந்த விளம்பரம்

கடந்த இரண்டு நாட்களாக உயர் அல்ஸேசன் இன நாயைக் காணவில்லை. நீண்ட சுருண்ட வால்; கறுப்பும் மண்ணிறமும் கலந்தநிறம்; நெற்றியில் நீளமான வெள்ளை -அதன் பெயர் ஜொனி. கண்டால் பின்வரும் விலாசத்திற்கு அறிவிக்கவும் தகுந்த சன்மானம் உண்டு.

மூன்று நாட்களின் பின் அவருக்கு வந்த கடிதம்

ஐயா, தங்கள் விளம்பத்தில் குறிப்பிட்ட நாயை நான் பிடித்துக்கட்டியுள்ளேன். ஒரே ஒரு வித்தியாசம் மட்டும் உண்டு. நாயிடம் பெயரைக் கேட்டால் வள் வள் என்கிறது. சில வேளையில் ஊர் ஊர் என்கிறது. தயவுசெய்து நேரில் வந்து நாயை பெற்றுக் கொண்டு சன்மானத்தைத் தாருங்கள்,

சூ. ஏ. ரவிவர்மா, கரவெட்டி மேற்கு.

மாதத்திற்கான முக்கிய செலவினங்களைப் பற்றி இங்கிதமாக கூறிக்கொண்டிருந்தாள்.

“மூத்தவள் ‘ஏ. எல்’லுக்கு ‘அப்பிளிகேசன்’ போட வேணுமாம். எண்பது ரூபாயாம் முத்திரை. இந்த முறையெண்டாலும் அந்த முருகன் கண்முழிச்சாரெண்டா ..........அவள ஒரு மாதிரியா கரை சேர்த்துப் போடுவார்...”

“சரி...”

இந்த முறையோடு பிறைவேற் ஆக்கள் ஓ. எல். எடுக்க ஏலாதாம். சின்னவள் ‘ஓ. எல்’லுக்கு அப்பிளிகேசன் போட ஆசைப்படுறாள் ... அதுக்கும் ஒரு முப்பத்தைஞ்சு ... தேவைப் படும்...”

“சரி...”

“தம்பியிர பள்ளியால ‘ரூர்’ போகப் போறாங்களாம். அவன் ஒத்தக்கால்ல நிக்கான். அதுக்கு இருநூறு வேணுமாம்...”

“இப்ப நம்ப நாடு இருக்கிற நிலையில ‘ரூர்’ போறது புத்திசாலித்தனமல்ல...” - எல்லாவற்றிற்கும் சரி போட்ட சௌந்தர் அதற்குமட்டும் ..... சிறுமியை நினைத்ததாலோ என்னவோ மறுத்தே விட்டான்.

“தனது ஒரேயொரு மகனுக்கும் அந்த சிறுமிமாதிரி... போகும் வழியில் ஏதாவது... நடந்து விட்டால்...” - அதைக் கற்பனை செய்து பார்க்கும் தைரியமும் இல்லை சௌந்தருக்கு.

பணத்திற்காக தனது குழந்தைகளின் ஆசைகளை நிராகரித்தவன் அல்ல; தனது கைகளில் நம்பிக்கை கொண்டவன் சௌந்தர்.

“சனி ஞாயிறோடு சேர்த்து இரண்டு நாள் லீவு போட்டு விட்டு... யாழ்ப்பாண—மட்டக்களப்பு மினி பஸ் (பிறைவேற்) இரண்டு ‘றிப்’ அடிச்சால் எப்படியும் ஒரு முந்நூறு கொத்தும்... பிள்ளையள் சோதனைக் காசி பிரச்சினையில்ல...” என்று திட்டமிட்டுவிட்டு படுக்கைக்குச் சென்றான் சௌந்தர்.

பணக் கஷ்டம் வரும்போது இப்படி “பிறைவேற்’ ‘மினி வஸ்’ ஓடி சமாளிப்பது சௌந்தரின் வழக்கம். அதனால் அவருக்கு பெரிய பணமுடை என்று சொல்லுமளவிற்கு அவன் என்றுமே இருந்ததில்லை.

ஓய்வில்லாத உழைப்பு. இதுவரை அவன் எந்த விபத்திலும் சிக்கவில்லை. ‘லைசென்ஸ்’ புத்தகம் கூட வெறுமையாகவே இருந்தது. கெட்ட பழக்கம் என்று சொல்ல அவனிடம் எதுவும் இல்லை. கண் விழித்து லொறி ஓடும் காலங்களில் மட்டும் ‘சிகரெட்’புகைப்பான். வீட்டில் அதுவுமில்லை.

அன்று அந்த வீட்டில் உண்ணாமல் உறங்கியவன் சௌந்தரின் ஒரேயொரு மகனே. தாய் தந்தையரின் உரையாடலை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த அவனுக்கு, தந்தை எடுத்த முடிவு எதிர்பாராதது. அந்த ‘ஓர்’ ஏமாற்றம் அவனை என்னவோ செய்து கொண்டிருந்தது. சுருக்கமாகச் சொன்னால் அவனால் அதைத்தாங்கிக் கொள்ள முடியவில்லை.

நள்ளிரவில் கிணற்றில் சளார் என ஒரு சத்தம் சந்தேகத்துடன் விழித்தாள் சௌந்தரின் மனைவி. கிணற்றுப் பக்கம் இருந்து ‘அம்மா’ என்றொரு அலறல். அவ்வளவுதான். அந்த குரலை அடையாளம் கண்டபடி துடித்து எழுந்தாள் அவள்.

அவள் சௌந்தரை எழுப்பி கிணற்றை எட்டிப்பார்த்த போது... அங்கு தண்ணீருக்குப் பதில் இரத்தம். அந்த ஒரே மகன் தலைபிளந்த நிலையில் தண்ணீருக்குள் கிடந்தான். அந்த ஆசை மகனின் அஸ்தமனத்தை சௌந்தர் அவ்வளவுவிரைவாக எதிர்பார்க்கவேயில்லை.

எந்த குறையும் தெரியாமல் விடாமல் வளர்ந்த மகனின் பிரேதத்தை கண்டு பித்துப் பிடித்த நிலையில் நான் கைந்து தினங்கள் இருந்தான் சௌந்தர்.

அதிகளவு செல்லம் கொடுத்ததின் விளைவுதானோ இந்த விபரீத மரணம் என்று கூட நினைத்தான். மனைவிதான் அவனுக்குத் தைரியமூட்டிக் கொண்டிருந்தாள். இருவரும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் அழுது தங்கள் மனச்சுமையை மட்டுப்படுத்திக் கொண்டு வந்தார்கள்.

அன்று பேரதிர்ச்சி ஒன்று காத்திருந்தது சௌந்தருக்கு.

நீதிமன்றத்தில் இருந்து 'சம்மன்ஸ்' வந்திருந்தது. விலாசம் மாறி வந்திருக்குமோ என்று கூடச் சந்தேகித்தான். சந்தேகமேயில்லை. அவனுக்கே உரியது தான்.

குறித்த தினத்தில் 'லைசென்ஸ்' புத்தகத்துடன் நீதிமன்றத்தில் நின்றான் சௌந்தர். அவனுடைய 'ட்ரைவிங்'கைப் பற்றி பல குற்றச் சாட்டுகள்.

சௌந்தரின் லைசென்சை ஐந்து வருடங்களுக்கு ரத்துச் செய்து விடுவதாக நீதிபதி அறிவித்தார். சிலையாக நின்றான் சௌந்தர்.

அவனுக்கு 'ட்ரைவிங்கை' தவிர எந்த தொழிலும் தெரியாது. இன்னும் ஐந்து வருடங்களின் பின் நிரந்தரமாக ரத்து செய்யப்பட்டிருந்தாலும் அவன் அதைப் பற்றிக் கவலைப் பட மாட்டான். காரணம் அப்போதுதான் குழந்தைகளின் நிழலில், தயவில் நின்று கொள்ள முடியும் ஆனால் இப்போ......

இன்னும் சில மாதங்களில் அடுத்த குழந்தையும் பிறந்து விடும். குழந்தைகளின் உச்சக் கட்ட கல்வி, உணவுச் செலவுகளைச் சந்திக்கும் காலம்.

நடைப்பிணமாக நீதிமன்றத்தை விட்டு வெளியேறினான் சௌந்தர். வாசலில், அன்று காரில் வந்த கனவான்... (சௌந்தரை அறைந்தவன்) அட்டகாசமாகவும், அலட்சியமாகவும் சௌந்தரைச் சுட்டிக் காட்டி சிரித்தபடி, நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தான்.

பக்கத்தில் நின்ற தனது நண்பர்களிடம் அந்த கனவானைப் பற்றிக் கேட்டான் சௌந்தர்.

அவர் இம்மாவட்டத்தின் முக்கிய அரசியல் பிரமுகராம். அரசமட்டத்திலும் செல்வாக்கு மிக்கவராம். நினைத்ததைச் சாதிக்கும் சர்வ வல்லமைமை கொண்டவராம்.

அப்போதான் சௌந்தருக்கு உண்மை என்னவென்று விளங்கியது. வேதனையோடு சிரித்தான். "இந்த ஆசாமியின் வேலைதானு இது ." — என்று அவனது மனம் அருவருத்துக் கொண்டது.

"அந்த காருக்கு வழி விடாததற்கு...... என் வாழ்க்கைக்கு இருந்த ஒரேயொரு வழியையும் அடைத்து விட்டீர்களா .........?" — சௌந்தரின் பெருமூச்சு எங்கும் பரவியபடி இருந்தது.

(கற்பனையே)

---

## தேர்தல்...தேர்தல்...தேர்தல்...

O மன்னர்தமை ஆள்வதற்கு மன்னுதிமன்னர்களை மன்னர்கள் தேர்வதுவே தேர்தல்!

O இக்காலம் மக்கள்தம் தலைவர்களைத் தேர்வதுபோல் அக்காலமுமிருந்ததுவே உண்மை!

O தேடிவரும் தேர்தலினை எதிர்கொள்ள வேட்பாளர் நாடிடுவார் எம்துணையைக் காண்!

O சிரிப்பார் கும்பிடுவார் இனிப்பாகப் பேசிடுவார் விரிப்பாரெம் வாக்குக்கே வலை!

O மதுசேலை பணம்பதவி தந்தவர்கள் மயக்கிடுவார் இதுவுமெம் வாக்குக்கே குறி!

O வாக்குறுதி பலதருவார் வாய்ஜாலம் செய்வாரெம் வாக்குக்கே இஃதென்றுணர்!

O கோஷங்கள் மோதல்கள் வாதங்கள் இவையெல்லாம் தேர்தலுக் கணிகலமென்றறி!

O புள்ளடிகள் பெற்றவர்கள் பெரும்புள்ளியாய்வளர புள்ளியெனத் தேய்ந்திருப்போம் நாம்!

O கொள்கையினைப் பேசி கொள்கைக்காய் வாக்களித்தால் கொள்ளைசுகம் தேர்தலினுலுண்டு!

O மக்களது உரிமைகளில் தேர்தலுக்கு முன்னுரிமை எக்காலத்திலுமுண்டென்றறி!

"முருகு"

## தமிழக 'நவீனம்' வேண்டுகோள்

"ஈழத்து படைப்பாளிகள் அனைவர்க்கும் வணக்கம்! 'நவீனம்' எனும் எமது இதழ் 'வெளிநாட்டு சிறப்பு இதழ்' ஒன்றை வெளியிட முடிவுசெய்துள்ளது. எனவே உங்கள் எண்ணங்களையும், ஆர்வங்களையும் படைப்புகளாக்கி எங்கள் மலர் பணிகளுக்கு ஊக்கமளியுங்கள். பிரதிகள் தேவைபடும் நண்பர்கள் தனிப்பிரதி விலையான ரூபா 2.50ஐ (ரூ. 5.00) உடன் திரு. எஸ். உமாகாந்தன், அஞ்சலகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள். இலக்கிய ஆர்வலர்கள் இந்த பணிக்கு நன்கொடைகள் அளித்தும் உதவலாம். படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை கீழே கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க தாழ்மையுடன் வேண்டுகிறோம். திரு. ச. துரைமுருகானந்தம், 'நவீனம்' மாத இதழ், 118, பழையஅஞ்சலகத் தெரு, மானாமதுரை — 623606, முகவை மாவட்டம், தமிழ்நாடு"

—ஆசிரியர்குழு—

அன்புடன்
ச. துரைமுருகானந்தம்.

(வாசகர் வாய்மொழி தொடர்ச்சி...)

## சவூதியிலிருந்து ஒரு குரல்

சுடர் முன்பைவிட பல புதிய விடயங்களை அடக்கிக் கொண்டு வெளி வருவதைப் பார்த்து மனம் பூரிக்கின்றது. அரட்டை நல்ல பயனுள்ள அம்சம். அரட்டை என்று சொல்லிக் கொண்டு உண்மைகளை நன்றாக படம் பிடித்துக் காட்டுகின்றீர்கள், கால பலன்கள் சிரிக்க வைக்கின்றன. ஆசிரியர் தலைப்புகளில் மிகத் துணிச்சலான கண்டனங்களை அள்ளி வீசி இருக்கின்றீர்கள். நன்றாக இருந்தது. நம் இளைஞர்கள் திசைமாறக்காரணமே நம்முடைய தலைவர்கள்தான். அவர்களை பக்கபலமாகக் கொண்டு பதவிக்கு வந்துவிட்டு இப்பொழுது கிடைக்கும் சுகசீவியம் நிலை பெற அவர்களுக்கு இடையில் தமக்குள்ள நெருக்கத்தை நீண்ட வெளியாக்கிக் கொள்வது நம் தலைவர்களுக்கு கைவந்த கலை.

'இலக்கியச் சோலை' சின்ன பூக்களாக அழகாக தெளிவாக மலர்ந்துள்ளது. எழுத்தாளர்களை ரத்தினச் சுருக்கமாக ர(த்)தி அறிமுகப் படுத்துவது தனி அழகு. பூக்கள் பல நிறங்களுடன் மலர்ந்தால் சோலைக்கு தனி அழகு வந்து விடும்.

இலக்கியச் சோலையில் அ. செ. முருகானந்தம் அவர்களது நிலையை படம் பிடித்து காட்டியிருப்பதை வாசித்து மனம் வேதனைப் பட்டது. அந்த வேதனை பட்டென்று எழுந்து விட்டு அடங்கி விடுவதல்ல. சீக்கிரமே அதற்கு ஒரு நல்ல முடிவு உங்களை நாடி வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அருண் விஜயராணி. ஜெட்டா
சவுதி அரேபியா,

O O O O

சிறுகதைகள் பாராட்டத்தக்கது. கவிச்சரங்கள் கண. மகேஸ்வரன் அவர்களின் பாரதி கவிதைபோன்றன அபாரம்.

எஸ். நாகராஜா. செக்கடிப்புலவு,

O O O O

''பொன்னரி''யின் ஓவியத்தினை அட்டையில் தாங்கிவந்த புரட்டாதிச் சுடரைப் புரட்டினேன். பிரார்த்தனைகள் பிரமாதம். 'அரி'யார் பதில்கள் அநாயாசமாக, அழகாக அறிவிற்கு விருந்தாக அமைந்தது. கவிச்சரங்கள் அருமை. காவியமானவள் பெருமை கொள்கிறாள். இலக்கியச்சோலை இனித்தது. 'தலைகுனிவு' தரமான உருவகம். நிஜங்கள், வடிவழகி கேட்டவரம் அத்துடன் கண. மகேஸ்வரனின் கவிதை என்பன சிந்திக்க வைத்தன.

அ. கௌரிதாசன், மகாகிராமம்,

O O O O

நம் உடன் பிறப்புக்களின் உயிர்களுக்கு உலை வைக்கத்துடிக்கும் தர்மிஷ்டரை எந்தத் தமிழனாவது ஆதரிக்கலாமா என்ற உங்களது துணிச்சலை என்னவென்று பாராட்டுவது? சிம்மம் இராசிகாரர்களின் பிரார்த்தனை நிறைவேறுமென்பது சந்தேகமே, இன்னொரு தடவை பாரதி வருவாயா என்று கேட்ட மகேஸ்வரனை எப்படி பாராட்டுவதென்றே புரியவில்லை. பாரதி கண்ட பெண்கள் அல்ல இங்கு, நடமாடுபவர்கள், எத்தனை பாரதிகள் வந்தாலும் இந்தச் சாக்கடை மணத்தை அகற்றவே முடியாதது உண்மையே. இலக்கியச் சோலை தேனிலும் இனிது.

த. சிவநாதன். செட்டிகுளம்,

O O O O

ஈழத்தமிழர்களின் தனிஇதழான தங்கள் கலை இலக்கிய திங்களிதழ் புரட்டாதி மாத ''சுடர்'' சஞ்சிகையின் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். கடந்த சில மாதகாலமாகச் ''சுடர்'' உருவத்திலும் உள்ளடக்கத்திலும் நல்லதொரு வளர்ச்சியை நான் நன்கு உணர்ந்து வருகின்றேன்.

எம். சிவலிங்கம். தங்கோடை,

## இரசிகமணி நினைவுச் சிறுகதைப் போட்டி

ஈழத் தமிழ் இலக்கிய உலகின் பெரும் சக்தியாகத் திகழ்ந்த இலக்கியச் செல்வர், இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் அரை தசாப்த நினைவு தினத்தை முன்னிட்டு, குரும்பசிட்டி சன்மார்க்க சபை வேல் அமுதன் கலை, இலக்கிய குழுவின் அனுசரணையுடன் சிறுகதை இலக்கிய எழுத்துப் போட்டி ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது.

இப்போட்டியில் ஈழத் தமிழ் எழுத்தாளர்கள் பங்கு பற்றிக் கொள்ளலாம். கதைகள் சமூக பிரச்சினையைக் கருப் பொருளாகக் கொண்டனவாகவும், மண் வாசனை மிக்கனவாகவும், கதைஞரின் சொந்தப் படைப்பாகவும் இருத்தல் அவசியம். கதைகள் புல்ஸ்காப் கடுதாசியில் சுமார் ஐந்து பக்கங்களுள் அடங்கல் வேண்டும்.

கதைஞர்களது பெயரும், அஞ்சல் முகவரியும் கதைகளில் குறிப்பிடலாகாது. கதைஞர்கள் கதைகளைத் தெளிவாக எழுதி, எதிர்வரும் 15-10-82 ஆம் திகதிக்கு முன் **செயலர், சன்மார்க்க சபை, குரும்பசிட்டி, தெல்லிப்பளை** என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அதிசிறந்த முதல் இரண்டு கதைகளுக்கும் முறையே 200/- ரூபாவும், 100/- ரூபாவும் சன்மானமாக எதிர் வரும் நவம்பரில் சபை மண்டபத்தில் நடத்திடும் 'இரசிகமணி அரை தசாப்த நினைவுப் பெருவிழா'வில் வழங்கப்படும்.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகள்
காசுத்தாள்கள் போல் பெறுமதிவாய்ந்தவை,
அவற்றைச் சேகரித்துப் பெறுமதிவாய்ந்த
பொருள்களை வெகுமதியாகப் பெறுங்கள்.




- பெரிய கட்டில் விரிப்பு
- அழகிய துவாய்
- அழகிய பொலித்தீன் பை
- காந்திப் படமுள்ள கதர் பை
- காந்தியின் சிலை
- பாரதியாரின் சிலை
- அறிவு நூல்கள்
- நீதி நூறுகொத்து
- ஆத்திசூடி ஆங்கில உரை
- கொன்றை வேந்தன ஆங்கில உரை
- சுவாமிப் படங்கள்
- நால்வர் படஙகள்
- பெரியவர்களின படங்கள்
- அப்பியாசக் கொப்பி
- நீதிக் குரங்குப் பொம்மை
- பனையோலைத் தொப்பி
- யோகாசன படங்களும் புத்தகமும்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77. யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 2


## "சுடர்" நண்பர் வட்டம்

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்—நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கலாம். தெளிவான விலாசத்துடன் தங்கள் பொழுது போக்கு விபரக்குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

சுடர் நண்பர் வட்டம்
194ஏ, பண்டாரநாயக்க
மாவத்த,
கொழும்பு — 12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 13-00
ஒரு ஆண்டு — 25-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா.........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்புகிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்து...... ... மாதம் முதல் சுடரை அனுப்புமாறு வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ...... ... ........ ...... ....... .........

விலாசம்: ........ ....................................... ...

........ .......................................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.




சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு — 12 இல் உள்ள
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.